478

Regd. No. M 373.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம் சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

தொகுதி 9 } காளயுக்திஸு புரட்டாசி ஐப்பிசிமீ
1918ஸு செப்டம்பர் அக்டோபர்மீ } பகுதி 5-6

MAR 1924

விஷயங்கள்

1. தற்காலநிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர், பி. எ. 129, 177
2. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி வெங்கு சாமி ஐயர் ... 137, 68
3. மநு ஸ்மிருதியின் ஆதாரங்கள்—பி. எஸ். ராமசுப்பையர் 140
4. பிரஹ்மக்ஞான சபையும் அதன் வேலையும்—அ. ரெங்க சாமி ஐயர் 143
5. குரு பூஜை—வி. ஆர் சுந்தரராஜ அய்யங்கார் 150
6. பிரசிடெண்டு வில்ஸன் அவர்கள் உபந்யாசம்—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 155
7. சமாசாரம் 171
8. ரிஷிகளின் உபதேசம்—ராமச்சந்திர நாயுடு 179
9. இந்திய சாரணர் சங்கம்—பி. எ. சுப்ரஹமண்யம் 184
10. புத்தகவிமர்சம் 139, 167, 175
1 . பத்திராதிபர் பக்கம் 129

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாகேளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
தபாம் சார்ஜ் வேறு

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

மதுரை அழகிய புட்டா சேலை.

இரட்டை முந்தாணி சந்திரகளா சேலை 16 முழம், 2½ முழம் அகலமுமுள்ளது. சாயத்திற்கு உத்திரவாதம். அதில் அநேக சிறப்பான புட்டாக்கள் பல ரசங்களுண்டு. ஒவ்வொரு சேலை, வாங்குவோர்க்கு எலெக்டிரிக் பொன் மோதிரம் ஒவ்வொன்று பரிசளிக்கப்படும். விலை ரூ. 6—0—0

பாலாமணி மாங்காய் சேலை ரூ. 4—8—0

பந்தர் தவனக்கொடி சேலை ரூ. 5—0—0

சகுந்தலா இமிடேஷன் புடவை விலை ரூ. 5—12—0

நரசாபுரம் சர்கை சேலை விலை ரூ. 7—0—0

எமது கம்பெனி புதுசாட்லாக்கும், 1919-ஆம் வருஷத்து காலண்டரும் வேண்டுபவர் ½ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டியது.

எரேசன் அண்டு கம்பெனி.

நே. 2. ராமாநுஜய்யங்கார் தெரு,
சௌகார்பேட்டை மதராஸ்.

---

(1) ஸாக்ரடீஸ் சரித்திரம்

ஆர். ரெங்காச்சாரியார் எம். ஏ. எல். டி.

140 பக்கங்கள் அடங்கிய சரித்திரப் புத்தகம், மிகவும் செவ்விய நடையில் எழுதியது. யாவரும் வாங்கிப்படிக்க வேண்டியது.

விலை அணா 12, தபால் ஜார்ஜ் வேறு.

(2) விக்கிரஹாராதனை:— ஒரு சம்பாஷணை. கே. ராமச்சந்திரையர் விலை 0—1—0 பூர்ணசந்திரோதயம் சந்தாதார்களுக்கு 0—0—9. தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். 25 பிரதிகள் ஒரு தடவை வாங்குவோருக்கு 25 % கமிஷன்.

(3) மீனாட்சி சுந்தரம்.

அழகிய தமிழ் நாடகம். விலை 0—6—0. தபால்கூலி வேறு பூர்ணசந்திரோதயம் சந்தாதாருக்கு 0-5--0. தபாற்கூலி வேறு.

பூர்ணசந்ரோதயம் ஆபீஸ்,
மதுரை.

பூர்ணசந்திரோதயம்

தொகுதி 9 { காளயுக்தி ஞு புரட்டாசி ஐப்பசி மீ
1918 ஞு செப்டம்பர் அக்டோபர் மீ } பகுதி 5-6

பத்திராதிபர் பக்கம்.

செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் சஞ்சிகைகள் இது காறும் வெளி வராமலிருந்ததற்காக நேயர்களுடைய மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தேசமெல்லாம் உலாவிவரும் இன்புளுபன்சா என்ற சுரத்தின் கொடுமையாலும் வேறு சில அசௌகரியங்களாலும் அச்சாபீசில் வேலை தாமதப்பட்டு விட்டது. அதனால் தான் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதனைப்பற்றி மிகவும் வருந்துகிறோம். இரண்டு மாதச்சஞ்சிகைகளையும் ஒருங்கே சேர்த்து ஒன்றாக அனுப்பியிருக்கிறோம். அதை அங்கீகரிக்கும்படி கோருகிறோம்.

தற்கால நிலைமை.

பிரஹ்மக்ஞான சபையின் தலைவரான மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மாள் அவர்களுக்கு உலகத்தில் பற்பல பாகங்களினின்று வங்க உபசார நிருபங்களுக்குப்பதிலாக அடியில்

கண்ட வார்த்தையைக் கூறியுள்ளார். அவ்வார்த்தையைச் சிந்தித்து, மனனம் செய்து உஜ்ஜீவிப்போமாக.

***

உறுதியுடனும், பலத்துடனும் இருப்பாயாக. சாசுவதமான மலையை நிகர்த்த உறுதிப்பொருளின் பேரில் நிற்கிறாய். ஆகாயத்தில் மேகங்கள் சஞ்சரிப்பினும், அவைகளுக்கப்பால் நக்ஷத்திரம் காணப்படுகிறது பார்!

***

நமது அன்னையவர்களைப்பற்றி ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸர் சிலவார்த்தைகள் கூறியிருப்பது மிகவும் பொருத்தமாயும், அழகாகவும், இருப்பதால் அவைகளை இங்குக் கூறுவோம், "பாரமாத்மிகவாழ்வே உருவெடுத்ததெனத் தோன்றும் ஸ்ரீ அன்னிபெஸண்ட்அம்மாளைப்போல் வேறு ஒருவரும் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் அநேக பரிசுத்தர்களான ஸந்யாஸிகள் பற்பல பாகங்களில் இருப்பதாகக்கேள்விப்படுகிறோம். ஆனால் அவர்களை நான் நேரில் பார்த்ததில்லையாகையால் அவர்களைப்பற்றி என்னால் ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் நமது அன்னையை தினம் தோறும் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். அன்னவரது இடைவிடாத வேலையைப்பற்றி எனக்கு நன்றாகத்தெரியும், ஆகையால் தான் இந்தியாவில் பிரமாத்மிக வாழ்வுக்கு நிதர்சனமான திருஷ்டாந்தமாக அவர்களைக் கூறலாம் என்று கூறுகிறேன்.

***

"பாரமாத்மிகவாழ்வு என்றால் எப்போதும் ஸமாதியிலிருத்தல் என்று நான் கொள்ளவில்லை. தியாநம், ஸமாதியும் வேண்டியவைதாம். பாரமாத்மிகவாழ்வில் அவை ஒரு அங்கமாகும். அனால் தியானத்திலிருந்து ஈசுவர சைதந்யத்தையும் அதன் நியதியையும் அறிந்த பிறகு அந்நியதியை யனுசரித்து உழைக்கும்படி உன்னுடைய உற்

சாகமே உன்னைத் தூண்டுகின்றது. ஈசுவர நியதியானது இரண்டு பாகமாயுள்ளது. ஒன்று ஈசுவரனது உத்தேசத்தில் மானிடர் வாழ்க்கையில் எப்படி அழகாய் நிகழ்ச்சிகள் ஏற்படவேண்டும் என்ற உத்தேசம். இரண்டாவது: ஆனல் மனிதர்கள் தம் சிற்றறிவினுலும், அகங்காரம் மகாரத்தினுலும், அவ் வுத்தேசத்தை முழுவதும் நிகழவொட்டாமல் தடுப்பதினுல் உலகத்தில் எப்படி கடவுளுடைய நியதியானது காணப்படுகிறது. ஆகையால் ஒருவன் தியான ஸமாதியினுல் உலகம் எப்படி நிகழ வேண்டும் என்று ஈசுவரனுடைய உத்தேசம் என்பதை அறிவதினுல் அது பூர்ணமாய் நிகழாமல் ஊனமாயிருப்பதை மாற்றி பூர்ணமாய் நிகழும்படி செய்யப் பிரயத்தினம் செய்யாமல் யிருத்தல் எப்படி சாத்தியம்? மேலும் ஒவ்வொருவர் சம்மந்தமாயும் கடவுளுடைய உத்தேசமிருக்கின்றது. நான் எப்படி யிருக்கவேண்டும் என்று கடவுள் உத்தேசிக்கிறுர்? நான் எப்படி வாஸ்தவத்தில் இருக்கிறேன்? என்று இரண்டையும் அறியவேண்டும். கடவுளுடைய உத்தேசமானது நேர்மையாயும், அழகாயும், பூர்ணமாயும் இருக்கின்றது. நம்முடைய ஸ்திதியோ, கோணலாயும், ஊனமாயும், விகாரமாயும், இருக்கின்றது. ஈசுவரனுடைய உத்தேசத்தை ஒரு சிறிதாகிலும் அறிந்தால், உடனே அவ்வண்ணமேயாக வேண்டுமென்ற அவாவும்; அவரது உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானமும், அவசியம் உண்டாகின்றன.

***

"பாரமாத்மிக வாழ்வு என்னையோவெனின், உலகம் சம்மந்தமாயும், என் சம்மந்தமாயும், கடவுளது உத்தேசத்தை நிலவுலகில் நிறைவேற்றுவதுதான். அவ் வுத்தேசத்தின் அழகையும் பூர்ணத்தையும் இப் பூவுலகில் தோற்று வித்தலே. இங்குக் கவனிக்கவேண்டிய நுட்பமான உண்மையொன்று உளது. என்னைப்பற்றியுள்ள கடவுளது உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டுமானுல் இதரர்களைப்

பற்றியுள்ள கடவுளுடைய உத்தேசத்தை அவர்களுக்காக உழைத்து நிறைவேற்றினல் தான் பயன்படும். ஆகையால் பாரமாத்மிக வாழ்வு என்றால், கடவுளது உத்தேசத்தை அறிவதும் அதற்காக உழைத்தலுமாம். அறிதலும், உழைத்தலும், ஞானமும் கர்மமும், ஈசுவர பக்தியும் சகோதரனிடத்தில் அன்பும், பாரமாத்மிக வாழ்வில் இணை பிறிக்கமுடியாதவை.

***

"நமது அன்னையார் விஷயத்தில் உற்று உணர்வோமானல் இவ்விரண்டுபாகமும் ஆச்சரியகரமான வண்ணம் பூரணம் பெற்றிருப்பதைக் காண்கிறேம். உலகத்தார் இப்போது இவ்வம்மணியைப் பெருமை வாய்ந்த கர்மயோகியாய்க் காண்கிறார்கள். ஒற்றுமையற்றவர்களை ஒருங்கு சேர்ப்பதையும், சிதைந்து போனதை புதிய உருவம் கொடுத்து ஒழுங்கு படுத்துவதையும், அதற்காக நிரந்தரமாக உழைப்பதையும், ஒருவாறு உலகத்தார் இப்போது அறியலாம். ஆனல் இதைச் செய்வதில் சாமர்த்தியம் எங்ஙனம் வாய்த்தது என்று யோசிப்பார்களானல் ஆழ்ந்த சிந்தனையினலும், கடவுளது நியதியை அறிந்ததாலும், தன் சகோதரர்களான ஜீவராசிகளுக்கு திரிகரண சுத்தியோடு உபகரமாய் உழைத்து வந்ததாலும் தான் இந்த சாமர்த்தியம் சித்தித் திருக்கின்றது என்று தெரிவார்கள்.

***

"நமக்கு ஒரு நிதர்சனமான திருஷ்டாந்தம் என்று சொன்னேனே அது எவ் விஷயத்தில் என்றால், ஈசுவரனது உத்தேதத்தை நிறைவேற்றுவதில். சத் குணங்களில் பெறுதற்கரிய இரண்டு உத்தமகுணங்கள் வாய்க்கப் பெற்றிருக்கின்றனர் நமது அன்னை. அதாவது தீவிரமான சக்தியும் ஜயாபஜயங்கள், சீதோஷ்ணங்கள் ஸுகதுக்கங்களிவைகளால் சலிக்காத தீரத்தன்மையும். பால்ய முதல் இதுவரை இடையூறுகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்துகொண்டேயிருக்கின்றன, அவைகளையெல்லாம் தன்

விடா முயற்சியாலும் சக்தியினாலும் ஜயித்துக் கொண்டே வந்திருக்கிறார். யுத்த வீரனுடைய அஞ்சா நெஞ்சமும், துணிகரமான வீரமும், சேனாபதியினுடைய சடுதியில் தீர்மானத்துக்கு வரும் சக்தியும், ஸந்யாசியினது மன அமைதியும் இவரிடத்தில் ஒருங்கேகாணக் கிடக்கின்றன. இந்தியாவில் ராஜரீக சீர்திருத்த விஷயமாய் உழைப்பவர்களில் இவ்வம்மணி செய்யும் வேலையின் தீவிரத்தில் பத்தில் ஒரு பங்கு தீவிரமாய் உழைப்பவர் ஒருவர் கூட இல்லை யென்று நினைக்கிறேன். இந்தியர்களை இவ்வம்மணி யெவ்வளவு ஆர்வத்துடனும் அன்பாயும் நேசிக்கிறாரோ அதில் பத்தில் ஒரு பங்கு ஆர்வத்துடன் நேசிப்பவர் கிடையாதென்று நான் தைரியமாய்ச் சொல்லுவேன். இந்தியா சம்மந்தமாயுள்ள கடவுளுடைய உத்தேசத்தை நிறைவேற்றுவதற்கான எக்காரியத்திலும், என்ன அவமானம் வரினும், என்ன கஷ்டம் நேரினும் அவைகளைப் பொருட்படுத்தாது உழைப்பதற்கு வேண்டிய உற்சாகமும், உயர்லக்ஷ்யமும் இவரிடத்தில் காணப்படுகின்றன. இவரை சரியானபடி அறியாமல் இந்தியர்களும் இவ்வம்மணியை அவதூறு கூறி யிருக்கிறார்கள். அவ்வண்ணமே இந்தியரல்லாதாரும் இவரை வசை கூறி யிருக்கிறார்கள். இருந்தபோதிலும் இவைகளைப் பொருட் படுத்தாமல் மேற்கூறியபடி உயர் லக்ஷ்யத்தினின்று கண்ணை நீக்காது இருந்து, தன்னுடைய ஒவ்வொரு கஷ்டத்தையும் தன் தபோ மகிமையால் இந்தியாவின் கைங்கரியத்துக்கு ஒவ்வொரு கருவியாக மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார். இந்தியாவின் கைங்கரியமே உலககைங்கரியமாகின்றது.

***

தீமையை நன்மையாக ஆக்குவித்தல், தான்படும் கஷ்டத்தை அறிவாக மாற்றுதல், தனக்கு நேரும் வருத்தத்தை, கடவுளுடைய நியதியை நடத்துவதற்கு, ஒரு உபகரணமாவும், ஒரு சக்தியாகவும் மாற்றிக் கொள்ளுதல்—இவைதாம் பாரமாத்மிக வாழ்வெனப்படும். தியாஸபிஸ்ட், அடையார் புலடீன், நியூ இந்தியா, முதலிய பிரசுரங்

களுக்காக வியாசங்கள் எழுதுவது, பிரஹ்மக்ஞான விஷயமாயாவது ராஜீய சீர்திருத்த மசோதா விஷயமாயாவது உபந்யாசம் செய்வது, இந்தியா முழுவதும் அலைந்து ஆங்காங்குள்ள பிரிவுகளை சேர்த்து, குழப்பங்களை சமாதானம் செய்து, இந்திய ஸ்திரீ புமான்களை ஒருங்கு சேர்க்க முயலுதல்—இவைகளை யெல்லாம்செய்ய ஒரு இமைப்பொழுதும் இடைவிடாமல் ஓய்வொழிவில்லாமல் உழைத்துவரும் இவ்வுத்தமியைக் கண்கூடாகக்கண்டு, ஈசுவர நியதியை நிறைவேற்ற உழைப்பது எங்ஙனம் என்பதை நாம் அறிவோமாக. நாம் ஒவ்வொருவரும் இவரைப் போல் ஆகவேண்டுமென்று நினைக்கிறோம். ஆகையால், அம்மாதிரியே கடவுளது ஏற்பாட்டை நிறைவேற்றும் கைங்கரியத்தில் ஒரு ஸேவகனாக ஆகவேண்டும் என்று நமக்கு அவாவானது இருப்பதால், இவ்வுத்தமியின் பொறுமையைப் பார்த்து நாமும் பொறுமையை அடைவோமாக. ஜய அபஜயங்களில் சமானமான புத்தியைப் பார்த்து நாமும் அதையடைய முயல்வோமாக. அவருடைய உற்சாகத்தையும், உயர்லக்ஷயத்தையும் பார்த்து நாமும் இடையூறுகளைத் தாண்டுவதற்கு வேண்டிய உற்சாகத்தையும் உயர்லக்ஷயங்களையும் பெறுவோமாக.

***

"பாரமாத்மிகவாழ்வைப் போதிக்கும் நூல்கள் அநேகமிருக்கின்றன. ஆனால் அவைகளை உள்ளபடி அறிதல் அரிது. கண்கூடாகத் தன் நடத்தையால் அவ்வாழ்வை நடத்திக் காட்டுபவரிருந்தால் அதை நாம் உள்ளபடி அறிதல் கூடும். கடவுளுடன் உதவியாயிருந்து அவரது போர்களில் சண்டையிடுபவரும், அவரது ஞானத்தை பூர்ணமாய் பெற்றிருப்பவருமான நமது அன்னையை நான் தினந்தோறும் சமீபத்திலிருந்து அறிய நேர்ந்ததே எனது பெரும் பாக்கியம். பாரமாத்மிக வாழ்வின் நிரூபணமே இவர் என்று நிச்சயமாய்க் கூறுவேன்."

யுத்தம் முற்றுப்பெறும் சமயம் நெருங்கிவிட்டதாகத் தோன்றுகிறது. இச்சந்திகையில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் அக்கிராஸனர் செய்த உபந்யாஸத்தைப் பார்க்கலாம். அது செப்டம்பர்மீ 27-ந்தேதி செய்யப்பட்டது. இதற்கு முன் ஜனவரி மீ த்திலும் ஜூலைமீ 4உயிலும் சில உபந்யாஸங்கள் செய்திருந்தார். அவைகள் எல்லாவற்றிலும் கூறிய தத்துவங்களை தாம் ஏற்றுக்கொள்வதாயும், அவைகளையே ஜர்மானியருக்கு எதிர்சக்ஷியில் சேர்ந்த யாவரும் ஒற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புவாதாயும், யுத்தத்தை முடிவில் சமாதானம் செய்வதற்கு முன்னால் தாத்காலிகமாக யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்றும் பிரஸிடெண்டு வில்ஸன் அவர்களுக்கு ஜர்மன் சான்ஸலர் என்ற பிரதம மந்திரி தெரிவித்தார். இது அக்டோபர் மாசத் துவக்கத்தில்.

***

ஜர்மனியில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்னிருந்த சேனாதிபதிகள், மந்திரிகள், எல்லோரும் வேலையை ராஜீநாமா செய்து விட்டார்கள். ஆலோசனை சபையே கலைந்து விட்டது. சென்ற மூன்று நான்கு மாதங்களாக ஜர்மானியர் தோல்வியே அடைந்து வருகிறார்கள் ஜர்மனியில் ஜயத்தினால் தான் ஜனங்களுடைய வாயானது கட்டுப்பட்டிருந்தது. அபஜயம் வரவும் ஜனங்களுடைய கூக்குரல் அதிகப்பட்டது. ஜனத்தலைவர்கள் தருமத்துக்கு விரோதமான ஜர்மன் ராஜாங்க நடபடிக்கைகளில் அறுவறுப்பைக்காட்டத் தலைப்பட்டார்கள். ஜனக்குழப்பத்திற்கு மாறாக முந்திய ஆட்சியாவது மந்திரியாவது நிலைக்க முடியவில்லை.

***

இப்போது புதிய ஆட்சிமுறை ஜர்மனியில் ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள ஒரு பிரபு, ராஜவம்சத்தைச் சேர்ந்தவர், சான்ஸலராய் வந்திருக்கிறார். மந்திரி சபையில் ஜனத்தலைவர்கள் சிலரும் தொழில் தலைவர்

கள்சிலரும் சேர்ந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் பார்லிமெண்டுக்கு என்ன அதிகாரங்கள் இருக்கின்றனவோ அம்மாதிரியான அதிகாரங்களைப்புதிதாக சட்டங்கள் மூலம் கொடுத்திருக்கிறார்கள். ஜனங்களுக்கு உரிமைகள், அதாவது பணத்தின் வரவுசெலவைக்கண்டிக்கும் அதிகாரம், யுத்தம்செய்தல், சமாதானம் செய்தல் இவைகளுக்கு அதிகாரம் சட்டப்படி இப்போது ஏற்பட்டு விட்டன. ஜர்மன் அரசரைநீங்கும்படிக்கும் அவரைப்போல் யுத்தப்பிரியரான அவரது குமாரரை அரசனுக்காமல் இப்போதைய அரசரின் பேரனை அரசராக்க வேண்டுமென்றும் அவர் இப்போது 12-வயதுச் சிறுவனாக இருப்பதால் அவருக்கு வயது வரும்வரை ஒரு பிரதிநிதி சபை மூலம் ஆட்சி நடத்தப்படவேண்டும் என்றும் கிளர்ச்சி நடந்து வருகிறது. ஜர்மன் அரசரும் தான் நிரந்தரமாய் அரசராக யிருக்கவேண்டுமென்று தன் எண்ணமில்லை யென்றும் தக்கசமயம் வரும்போது ராஜீனுமா செய்யவேண்டு மென்றும், உத்தேசித்திருப்பதாயும் சொல்லுகிறார். மேலும் ஜர்மன் அரசர் செய்திருக்கிற அறிக்கை விளம்பரத்தில் தான் ராஜ்யசபைகளின் மாறுதல்களைத் அங்கீகரிப்பதாயும், தான் ஜனங்களின் ஸேவகர்களில் ஒருவராக இருப்பதாயும் வெளியிட்டிருக்கிறார்.

***

பிரஸிடெண்டு வில்ஸன் யுத்தத்தை தாத்காலிகமாக நிறுத்தவேண்டுமானால் ஜர்மானியர் தன் நாட்டுக்குத் திரும்பிப்போய்விடவேண்டுமென்றும், அனுவசியமாய் யுத்தத்தில் சேர்ந்தவர்களை கொல்லுதல், ஆஸ்பத்திரிகள் கோவில்கள் இவைகளைச் சிதைப்பது முதலிய அதிக்கிரமங்களை நீக்குவது முதலிய நிபந்தனைகளுக்கு உடன்படுகிறதானால் நேசக்கக்ஷியாரிடம் யுத்தநிறுத்தத்தைப்பற்றி பிரேரேபிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அதற்கும் ஜர்மானியர் சம்மதித்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் சமாதானம் நடைபெறலாம். ஆனால் அது வரைக்கும் நாளுக்கு நாள் நேசக்கக்ஷியாருக்கு ஜயலக்ஷ்மி பெருகி வருகிறாள்.

(177-ம் பக்கம் பார்க்க.)

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

33-வது அத்தியாயம்.

மானசலோகம்:—தொடர்ச்சி.

நல்ல ஜனங்கள்—அதாவது பாவத்திலிருந்தும் அதன் பயனிலிருந்தும் மீட்கப்பட்ட ஜனங்கள் மட்டும் மோக்ஷத்துக்குப் போவார்களென்று சொல்லும் சில மதக்கோட்பாடுகளுக்கும் பிரஹ்மக்ஞான உபதேசங்களுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்பதை மேலே சொல்லப்பட்ட அத்தியாயங்களினால் தெளிவா யறியலாம். சுவர்க்கலோகமானது நாம் வசிக்கும் பூமியின் ஒரு பாகமென்றும், அது நித்தியமான தல்லவென்றும், கற்பந்தோறும் அது நூதனமா யுண்டாகிறதென்றும், பிரஹ்மக்ஞானம் உரைக்கின்றது. மேலும் பூமியில் நமக்கு அனேக ஜன்மங்களுண்டென்றும் ஒரு ஜன்மம் முடிந்தவுடன் நம்முடன் கூடவரும் நல்ல எண்ணங்கள் நல்ல நடத்தைகளுக்குத் தக்கபடி அதிக காலமோ அல்லது குறைந்த காலமோ சுவர்க்கத்திலிருப்போமென்றும், ஒவ்வொருவரும் மனித ஜன்மம் எடுத்த காலம் முதல் இவ்விதம் செய்து வருகிறோமென்றும் சொல்லுகிறது.

ஒவ்வொரு மானிடனும் கொஞ்சமேனும் நன்மை செய்யாமலிரான். ஏனெனில் எல்லா ஜீவர்களும் ஈசுவரனுடைய அம்சர்கள். அந்த நல்ல பாகத்தை விருத்தி செய்தும் ஈசுவராம்ச வித்தாகிய தன்னை வளரச் செய்து கொண்டும் வரும்போது நன்மையானது மேன்மேலும் அதிகரிக்கின்றது. இவ்விதம் நம்முடைய ஈசுவரத் தன்மை விருத்தியாக ஆக நாம் அதிக காலம் சுவர்க்கத்தில் வசிப்போம்.

ஒவ்வொரு நல்ல செய்கையும் ஒவ்வொரு அன்புள்ள எண்ணமும் ஈசுவர சக்தியை வெளியிடுகிறது. அச் சக்தியானது நம்முடைய பூலோக புவர்லோக வாழ்க்கை முடிந்த

2

வுடன் நம்மை சுவர்க்கத்துக்கு இழுக்கிறது. இப்பேர்ப்பட்ட அன்புள்ள தெய்வீக சக்தியானது ஈசுவரனுடைய ஒரு பாகமாயிருக்கிறது. ஏனெனில் அன்பே ஈசுவரனும். எல்லாரிடத்திலு மிருப்பதுபோல் கடையனான குற்றவாளியிடத்திலும் சுயநயம் பாராட்டாத அன்பின் ஒரு திவலையாவது இருக்குமாகில் ஒரு நிமிஷ காலமாவது அவன் சுவர்க்கத்துக்குப் போவான். அவன் சுவர்க்கத்துக்குப் போய் அதை விட்டு வெளியேறுகிற அந்த சொற்ப காலத்திற்குள் அவனிடமுள்ள தெய்வீக வித்தில் ஒரு துடிப்புண்டாகிறது. அதினால் அது வர வர வளர்ந்து அவனை காலக்கிரமத்தில் உத்தமமான நல்ல மனிதனாகச் செய்யும்.

நூற்றுக் கணக்கான அனேக ஜன்மங்களாக ஒரு ஜன்மத்துக்கும் மற்றொரு ஜன்மத்துக்கும் இடையில் நாம் சுவர்க்கத்தில் செலவழிக்கும் காலமானது வர வர அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. அதற்குத் தக்கபடி நரகமென்று சொல்லப்பட்ட புவர்லோகத்தின் அதம பாகத்தில் நாம் வசிக்கும் காலமானது வர வரக் குறைந்துகொண்டு வருகிறது. கடைசியில் நம்முடைய பூலோக வாழ்க்கையில் நமக்கு நேரிடும் அற்பத் துன்பங்கள் கூட நரக வாதனைபோலிருக்கும். அப்பால் சுவர்க்க நரகங்களைப் பற்றிய நம்முடைய எண்ணங்கள் மாறிப் புதிய கோட்பாடுகள் உண்டாகும். அதன்படி நம்முடைய சுவர்க்க வாசம் அதிக காலம் அல்லது சொற்பகால மிருக்குமென்று சொல்லுவது வருத்தம், உதாரணமாக—அனேக காலம் சுவர்க்க வாசத்தினால் உண்டாகும் சக்தியை வெகு சீக்கிரத்தில் ஆத்மதெய்வ சம்பத்தாக ஏற்படுத்திக்கொண்டு மானச லோகத்தின் மேற்பாதியான மகர் லோகத்துக்குச் செல்லலாம். அது மானசலோகத்தின் மேன்மையான திரவியத்தால் அமைக்கப் பட்டுள்ளது. அதுவே நம்முடைய பொக்கிஷ வீடு.

இச்சா சரீரம் ஸ்தூல சரீரம் போலவே மானச சரீரமும் நசித்துப் போகிறது. நாம் பூலோகத்துக்குத் திரும்

பும் காலம் வரும்வரை நம்முடைய அழகான பொக்கிஷ வீட்டில் வசிப்போம். அப்பால் நம்முடைய பொக்கிஷத்தை அவ்விடத்தில் வைத்துவிட்டு அதன் பயனான நடத்தையையும் மனச்சாட்சியையும் கைக்கொண்டு புதுப்பாடம் கற்றுக்கொள்ளவும் பழைய தவறுகளைச்சரி செய்துகொள்ளவும் மறுபடியும் பூலோகத்துக்குத் திரும்பி வருவோம். மறு பிறப்புக்கு வேண்டிய புதிய கர்மத்தைச் செய்யாமலிருக்கவும் யாதொருவருக்கும் செலுத்த வேண்டிய கடன் அற்றுப்போகும்படிக்கும் நாம் கற்றுக்கொள்ளும் வரை நாம் அடிக்கடி புனர் ஜன்மம் எடுத்துக்கொண்டேயிருப்போம்.

அப்பால் நமக் கிஷ்டமிருந்தால் மகர் லோகத்துக்கு மேலான லோகங்களுக்கும் போகலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட காலம் வரும்போது நம்முடைய உதவியன்னியில் உழன்று கஷ்டப்படும்படியாய் நம் சகோதிரர்களான ஜீவர்களை விட்டு விட்டு நமக்கு மட்டும் சாசுவதமான மோக்ஷத்தை அடையும்படியான சுயநயத்தைப் பாராட்டமாட்டோம். ஆகையால் கடவுள் நமக்கு வேறே வேலை கொடுத்து வேறிடங்களுக்குப் போகும்படி கட்டளை யிட்டாலொழிய உலகத்திலுள்ளவர்களுக்கு உதவிபுரிய நாம் திரும்பி வருவோம். நாம் சீஷர்களாக யிருந்தவிடத்தில் குருக்களாகவும் மகான்களாகவும் ஆவோம்.

வி. வெங்குசாமி ஐயர்

புத்தகவிமர்சம்.

தமிழர் வீரம்:—ஜகவீரபாண்டிய கவிராஜரவர்கள் இயற்றியது. 16 பக்கங்கொண்ட சிறு புத்தகமிது. நமது பூர்ணசந்திரோதயத்தில் அடிக்கடி வியாசங்கள் எழுதிவரும் ஆசிரியது தமிழ் நடையழகையும், தமிழ் ஆராய்ச்சியையும். நேயர்களறிவார்கள் செவ்விய செந்தமிழ் நடையில் போதிய மேற்கோள்களுடன் தமிழ் மக்கள் வீரச் செயல்களில் ஜோதி பெற்றவர் என்றும் வீரத்தாய்மாககளின் வீரத்தன்மையானது மிகவும் அரியது என்றும் அழகாய்க் கூறியிருக்கின்றார். தமிழ் அபிமானிகள் யாவரும் இதன் பிரதியை வாங்கி வாசித்துக் களியெய்துவாராக. விலை அணா 6

மனு ஸ்மிருதியின் ஆதாரங்கள்.

112-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பக்தியை அப்யஸித்து, ஸித்திகளைப் பெறுகிறான். அந்த ஸித்திகளின் மூலமாய்த் தான் பரமேசுவரனுடைய தன்மை விளங்குகிறது. பிரவிருத்தி மார்க்கத்தவர்களும் கூட ஏதாவ தொன்றைத் தீவிரமாய் இச்சிக்கிறார்கள். பிறகு தான் அதை அடைகிறார்கள். எப்பொழுதும் ஒன்றை இச்சித்து, அதை யடையும் வழியை எவன் எப்போதும் யோசிக்கிறானோ, அதை யடைவதற்கு இடையூறான வழிகளையும் கார்யங்களையும் எவன் ஒழிக்கிறானோ, அவன் உண்மையிற் பக்தி மார்க்கத்தின் தத்துவத்தையே அநுஷ்டிக்கிறான். ஆனால் இது குறித்த யாதொரு தேவதையையும் பார்த்துச் செய்த பிரார்த்தனை யல்லாமற் போனாலும், ஓர் மடையினின்று சிறு வாய்க்கால்களுக் கெல்லாம் ஜலம் பாய்வது போல் ஸர்வ ஞானத்திற்கும், ஸர்வ சக்திக்கும் ஆதாரமான பரப்பிரஹ்மத்தினின்றுவரும் அநுக்கிரக வெள்ளத்தினின்று ஒருசிறு வாய்க்கால் மூலம் இச்சிறு முயற்சியும் ஸித்திபெறுகிறது. நமது பிரயத்தனம் யாவும் அறியாமற் செய்யும் பிரார்த்தனைகள் தாம். அவ்விதப் பிரார்த்தனைகளுக்கும் கூட கடவுள் இரங்குகிறார். ஏனெனில் அவரிடத்தில் பரப் பிரஹ்மத்தின் இயற்கை பூர்ணமாய் விளங்குகின்றமையால், எந்தப் பிரார்த்தனைக்கும் அநுக்கிரகம் செய்கிறார். இதற்கு திருஷ்டாந்தமாக விஷ்ணு பாகவதத்தில் ஓர் கதையுள்ளது. தாமஸ மந்வந்தரத்தில் இரண்டு பெரியோர்கள் ஒருவர் மீதொருவர் பாராட்டி வந்த பகையினாலும், அஹங்காரத்தினாலும் அதோ முகமாய் விழுந்து, யானையும் முதலையுமாகப் பிறந்தார்கள். அப்போது முதலையினால் பீடிக்கப்பட்ட யானை மிகவும் நொந்து, அவ்யக்தமான தன் மநதை வெளியிடக் கூடாமற் கதறிய போது, பிரஹ்மாகவும் மற்ற தேவர்களும், அப் பிரார்த்தனை தமக்கல்ல வென்று சும்மா விருந்தார்கள். இந்த ஸமயம்

மண்டலத்தின் அதிபதியான ஸூரியானவர் எல்லாத் தேவர்களையும் தன்னிடத் தடக்கிக் கொண்டிருந்தமையால் உடனே ஆவிர்ப்பவித்து வந்தார். இவ்விரு சத்துருக்களையும் பந்தத்தினின்று விடுவித்தார்.

ஆகையால், எவ்வளவு உயர் பதவிக்குப் போனாலும் அஹங்காரமும், தர்ம சொத்துக்களைத் தவறி உபயோகிப்பதும், அதனால் அதோ முகமாய் விழக்கூடிய அபாயமும் பின்னோடே வருகின்றமையால், நமது சக்திகளை, பக்தியினாலும், ஞானத்தினாலும், வைராக்யத்தினாலும் உபயோகித்து வருவதோடு எப்போதும் மோக்ஷத்தை எதிர் பார்த்தவனாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் உயரப் போகப் போகக், கீழே விழும்பக்ஷத்தில் அபாயமும் அதிகப்படுமாகையால், கண்ணால் காணக் கூடாததும், காதால் கேட்கக் கூடாததும் எல்லாவற்றிற்கும் மேலாகவும், அவியக்தமாகவும் உள்ளதெதுவோ அதிலேயே நாம் மநத்தை நிறுத்தவேண்டும்.

இதனால் தான் "நன்மை எது, தீமை எது, நியாயம் அந்யாயம், உண்மை, பொய், நித்யம், அநித்யம், எதென்று எப்போதும் யோசித்துக்கொண்டே, எல்லாவற்றையும் தன்னிடத்திலேயே எவன் பார்க்கிறானோ அவன் ஒருபோதும் பாபத்தில் விழமாட்டான்". இவை தான் மநுஸ்மிருதியின் ஆதாரம் இவற்றைப் பின்னும் சுருங்கக் கூறுவோம்.

சாஸ்திரங்களில் கூறப்பட்ட கர்மங்கள் இருவகையாம். சுகத்தையும், இன்பத்தையும் தேடுவது, ஒன்று. அவைகளினின்று ஒழிந்து ஒப்புயர்வற்ற உயர் நலத்தை நாடுவது இன்னொன்று. இஹ பர லோகங்களில் சுகமடையும் பொருட்டுத் தனக்கென்று உழைக்கிறவன் பிரவிருத்தி மார்க்கத்தவன். அத்தகைய் ஆசையின்றிப் பிறர் நலத்திற்காக உழைக்கவேண்டும் என்ற ஸங்கற்பத்துடனேயே முயன்று வருபவன் நிவிருத்தி மார்க்கத்தவன். பிரவிருத்தி

மார்க்கத்தவன் இந்திரிய சுகங்களை யநுபவிப்பான். நிவிருத்தி மார்க்கத்தவன் பஞ்ச பூதமயமான லோகங்களுக் கப்பால் செல்லுகிறான்.

பிரவிருத்தி, நிவிருத்தி என்னும் இரண்டு மார்க்கங்களும் ஸம்ஸார சக்கிரத்தின் இருபாதிகள். இந்த சக்கிரத்தை பகவானே ஓட்டுகிறவர். ஆகையால், இதில் கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி வரிசைக் கிரமத்தில் எல்லா புருஷார்த்தங்களையும் ஒவ்வொருவரும் அடைய முயலவேண்டும்.

ஆகையால் மேற் கூறப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டே மநுவானவர் ஹிந்து நாகரீகத்தை ஏற்படுத்தினர். "தர்மம் தலை காக்கும்" என்ற பழமொழிக் கிணங்க எல்லாவற்றிற்கும் அடிப்படையானது தர்மம். இப்போத நேகர் உரிமைகளையும் லாபத்தையும் பற்றியே சிந்திக்கிறார்கள். அவைகளைக் கேட்குமுன் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியே சிந்திக்கும் வரை நமது முயற்சி பிரபலமாகாது. ஆகவே தர்ம சாஸ்திரத்தை முதலாகவும், இரண்டாவதாக அர்த்த சாஸ்திரத்தையும், மூன்றாவதாக காம சாஸ்திரத்தையும் நம் முன்னோர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். எல்லாவற்றினும் முக்கியமாக மோக்ஷ சாஸ்திரத்தை நமது முன்னோர்கள் கூறியிருப்பினும், நம் தேசத்து ஜன ஸமூஹம் அனைத்தும் இஹ லோகத்தில் க்ஷேம மடையுமாறு தர்மார்த்த காம சாஸ்திரங்களை மறக்கலாகாது.

பி. எஸ். ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான சபையும் அதன் வேலையும்.

(1918-ஆம் ஆண்டு ஜூலைமீ 20உ மதுரையில் நிகழ்ந்த தமிழ் பிரதேச பிரஹ்மஞான சங்கத்தின் வரவேற்பு அக்கிராசனம் வகித்த அ. ரங்கசுவாமி ஐயர் உபந்நியாஸம்.)

15-வருஷங்களுக்குமுன் மதுரையில் கூடின பிறகுதென்ஜில்லாக்களின் பிரம்ஹ ஞானசபைகளின் கூட்டம் (Southern Districts Theosophical Federation) என்று ஆதியில் நாமம் தரித்து இப்பொழுது தமிழ்பிரதேச பிரஹ்மஞானக் கூட்டம் (Tamil Districts Theosophical Federation) என்று பெயர் மாறி வழங்கும் சபையின் பிரதிநிதிகளாகிய தங்களுக்கு நான் நல்வரவு கூறுகின்றேன். நாம் முதல் முதல் 1903-ஆம் ஆண்டில் இம்மதுரைமாநகரில் தென் ஜில்லாக்களின் பிரஹ்மஞானக் கான்பரன்ஸ் என்ற கூட்டத்தின் பிரதிநிதிகளாக் கூடினோம். அதற்குப் பிறகு இத்தமிழ் நாட்டிலும் மேற்கு சமுத்திரத்தைச் சேர்ந்த மலையாளப் பிரதேசங்களிலுமுள்ள பிரதான நகரங்களிற் கூடினோம். அதற்கு பிறகு மலையாளப் பிரதேசங்களில் பிரஹ்மஞான சபையின் கருத்துகளையும், பிரயோஜனங்களையும் பரவச்செய்வதற்காக ஒரு கிளைக்கூட்டமென்ற கான்பெரன்ஸ் ஆனது ஏற்படுத்தப்பட்டது. இம்மத்திய காலங்களில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் பிரஹ்ம ஞானக் கூட்டங்கள் குறிப்பிட்ட காலங்கள் தோறும் கூடிக்கொண்டு வருகின்றது. தவிரவும் அடையாற்றில் ஒவ்வொரு வருஷமும் ஈஸ்டர் விடுமுறை நாட்களில் தென் இந்தியாவிலுள்ள பல ஜில்லாக்களுக்கும் பொதுவாக ஒரு பிரஹ்ம ஞானக் கூட்டமானது கூடிக்கொண்டு வருகின்றது. அந்த சமயங்களில் பிரஹ்மஞான விஷயங்களில் ஆராய்ச்சி செய்வோரும், அவைகளைப்பரவச்செய்பவர்களும் தென்இந்தியாவில் பற்பல இடங்களிலிருந்து வந்து கூடுகின்றனர்.

சென்ற பதினைந்து வருஷங்களாக பிரஹ்ம ஞான சபையின் வெளித்தோற்றமானது அதிக விநோதமாய் மாறுவது போல் காணப்படுகின்றது. முன்காலத்தில் பிரஹ்ம ஞான சபையானது சதா தன் தத்துவங்களாகிய கர்மம், புனர் ஜன்மம், சகோதரபாவம், போன்றஉண்மைகளை ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பட்ட ஒரு சங்கம் போல் மட்டும் விளங்கிற்று. ஆனால் இப்பொழுது சில வருஷங்களாக பிரஹ்மஞான தத்துவங்களை சாதாரண உலக விஷயங்களில் உபயோகப் படுத்துவதிலும், இந்தக் கர்மலோகமாகிய பூலோகத்தில் மனிதர்களும், ஜனஸமூகங்களாகிய பல ஜாதிகளும், விகாச மார்க்கத்தில் செலலுங்கால் அம்மார்க்கத்தில் பற் பல படிகள் போல ஏற்பட்டிருக்கும் வெவ்வேறு பிரவிருத்திகளை எவ்வாறு நடத்தத்தக்கது என்பதைப் போதிப்பதிலும் பிர்மக்ஞானமானது பிரவிருத்திப்பதுபோல் தோன்றுகின்றது. பிர்ம்ம ஞான சபை ஸ்தாபிக்கப்பட்டு பல வருஷங்களாயினும் அதின் சக்தியானது குன்றவில்லை. காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கவாறு அதின் தோற்றத்தை மாற்றிக்கொண்டுவருகின்றது. பிர்ஹ்மச்ஞானமானது இந்த சம்சாரத்தில் பிரயாணிபோல் செல்லுகின்ற ஜீவனின் கஷ்ட துக்கங்களை அகற்றி அவனுக்கு ஒரு மனச்சமாதானத்தைக் கல்பகோடி காலங்களாகக் கொடுத்துவந்திருக்கின்றது. இருள்போன்ற அஞ்ஞானத்தினால் போகும் மார்க்கம் இன்னதென்று புலப்படாமல் பயங்கரமான சம்சாரம் என்ற காட்டில் செல்பவனுககு அது ஒரு தீவட்டி வெளிச்சம்போல் பிரகாசிக்கின்றது.

உலகத்தில் தோன்றியிருக்கின்ற பெரிய சமயங்களுக்கு இதுகாறும் ஜீவாதாரமாக நின்று அவைகளை இந்தப்பிரம்ம ஞானமானது உயிருள்ளவைகளாகச் செய்கின்றது. உலகத்தில் தோன்றிய இப்பெரியமதங்கள் உடல்கள் போலவும், பிரஹ்மஞானமானது அவ்வுடல்களில் நுழைந்து அவைகளை ஜீவிக்கும்படி செய்யும் உயிர் போலவும் ஏற்படுகின்றது.

உலகத்தில் பற்பல மதங்கள் ஸ்தாபிக்கப்பட்டு உள மனிதன் விகாசமுறையில் மேன்மேற் செல்வதாலும் அக் காரணத்தால் ஜீவர்களிள் அமைப்பும், லக்ஷணமும், அவா வர்களுக்கு விகாச முறையில் ஏற்பட்ட ஸ்தானமும், பலவாறாகவிருப்பதாலும், இவ்வுலகில் ஜன்மமெடுக்கும் காலம், தேசம், ஜாதி, இவைகளால் ஜீவர்களின் வெளித்தோற் றம் வித்தியாசப்படுவதாலும், இவ்விதமாகப் பற்பல வித்தி யாசங்களையுமுடைய ஜீவர்கள் உஜ்ஜீவிப்பதற்காகப் பற்பல மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதமாய் ஏற்பட்ட பற்பல மதங்களுக்கும் உள் உயிர்போல் நின்று அவை களைப் பிரகாசிக்கும்படி செய்கின்ற பிரஹ்மஞானமானது அதனுடைய அந்தரங்கமான சுபாவத்தால் திரிலோகங் களுக்கும் அதிகமான லோகங்களைச் சார்ந்தது. ஆனால் ஜீவர்களின் மனசானது சுவர், மகர் லோகங்களைச் சார்ந் திருத்தலாலும், அவர்களுடைய இச்சைகளும், உணர்ச்சி களும், புவர்லோகத்தைச் சார்ந்திருத்தலாலும், அவர்களு டைய கிரியைகள் பூலோக சம்பந்தமாயிருத்தலாலும், இந்த திரிலோகங்களிலுமுள்ள பாதைகள் ஜீவர்கள் செல் வதற்கு சுலபமாயில்லை. ஆதலால் ஜீவர்களை ஒழுங்காய் நடத்துவதற்கு உலகில் பிரதானமாயுள்ள மதங்கள் ஏற் பட்டிருக்கின்றன. பிரஹ்மஞானமானது அதனுடைய பெருமையையும், கௌரவத்தையும் நிரூபணம் செய்வதா னால் ஜீவர்களுக்கு அத்திரிலோகங்களிலும் அவ்விதமான உதவியைப் புரியவேண்டியது அவசியம்.

பிரஹ்மஞான சபை ஸ்தாபிக்கப்பட்ட சில வருஷங் கள் வரை இச்சபையானது ஜீவனுடைய ஆத்மா, புத்தி, மனஸ், என்று மூவகைப்பட்ட பிரிவுகளின் சார்பாக சகோதிரபாவம் என்ற உண்மையை வற்புறுத்திக் கூறியதே யல்லாது அவனுடைய இச்சை, உணர்ச்சி, கிரியைகள், சம் பந்தமாக அச்சகோதிரபாவம் என்ற தத்துவத்தை அனுஷ் டானத்திற்குக் கொண்டுவர பெரும்பாலும் முயலவில்லை.

அக்காலங்களில் பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களில் அச்சபை அங்கத்தினர்களுடைய பிரவிருத்திகள் தத்துவஞான ஆராய்ச்சிகளிலும், தத்துவஞான நூல்களைக் கற்றலிலும், கிரந்தங்கள் பத்திரிகைகள் இவைகளைப் பிரசுரம் செய்வதிலும், பிரஹ்மஞான விஷயங்களைக் குறித்து பல கிரந்தங்களை இயற்றுவதிலும் பிரஹ்மஞானத்தை ஜனங்களுக்குள் பரவும்படி செய்வதற்குரிய புத்தக சாலைகளை ஸ்தாபிப்பதிலும் சென்றன. தவிரவும் ஆண்பால், பெண்பால், ஜாதி மதம், வர்ணம், முதலிய வேறுபாடுகளெல்லாம் வெளித்தோற்றங்களென்றும், இவ்வித வெளித்தோற்றங்களுக்குள் அந்தர்பூதமாய் உள்ளடங்கி நிற்கின்ற ஆத்மாவானது ஒன்றே ஒழிய பலவல்ல என்ற ஞானத்தை அவலம்பித்தும்; பூத வர்க்கங்கள், தாதுவர்க்கம், சாகவர்க்கம், பிராணி வர்க்கம், மானிடவர்க்கம், இவ்விதமான ஸப்தவர்க்கங்களிலும் கற்பகாலங்களாய்ப் பிரவேசித்துச் செல்லுகிற ஆத்மாவானவன் நித்தியன் உண்மையை அறிந்தும், என்ற ஸப்தலோகங்களுக்குள் ஸ்தூலமாகிய இப்பூமியில் ஜீவனானவன் அநேக ஜன்மங்களாய்த் தோன்றி ஒரு ஜன்மத்தின முடிவில் மற்றொரு ஜன்மம் எடுக்குமுன் கிரியாலோகமாகிய பூலோகத்திலிருந்து இச்சாலோகமாகிய புவர்லோகத்திற்குச்சென்று, புவர்லோகத்திலிருந்து மனோலோகமாகிய ஸ்வர்க்கத்திற்குச் சென்று, திரிலோக சஞ்சாரியாய் ஸம்ஸாரசாகரத்தில் சுழன்று, ஞானாபிவிர்த்தியால் அவைகளைத் தாண்டி, அவைகளுக்கதீதமான மஹாஜனதபஸ்ஸத்ய லோகங்களை அடைகிறான் என்றுந்தெரிந்துகொண்டுமவந்தார்கள். இவ்விதமாய்த் தெரிந்துகொள்வதினால் பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களின் மனோபாவமானது அதற்குத்தக்கவாறு மாறிக்கொண்டும் மேற்சொல்லிய விஷயங்களை அறிந்துகொள்வதில் மனதிற்கு ஒரு பற்றுதலும் அதிகரித்துக் கொண்டும்வந்தது. மனிதனானவன் விகாஸமுறையில் நாகரீகமற்ற மிலேச்ச ஜன்மங்களை பூர்வகாலங்களில் எடுத்து

அதற்குப்பிறகு படிப்படியாய் மேற்சென்று சாதாரண அறிவு நாகரீகம் இவைகளுடன் கூடிய ஜன்மங்களை அடைந்து அதற்குப்பிறகு தற்கால நாகரீக நிலைமையைத் தழுவுகின்றான் இவ்விதமாகக் காலக்கிரமத்தில் பல ஜன்மங்கள் எடுத்து பிறகு நிவிருத்தி மார்க்கத்தில் பிரவேசிக்கிறான். அம்மார்க்கத்தில் சென்று இடையிடையே, தீக்ஷா நிலைகளை அடைந்து, பக்திமார்க்கத்தின் முடிவாகிய பரிபூர்ண பிரேமையும், ஞானமார்க்கத்தின் கடையாகிய பேரறிவும், கர்ம மார்க்கத்தின் அந்தமாகிய உலகத்தின் ஹிதத்தையே நாடி உழைத்து வரும் கிரியாசக்தியும், அவனிடத்தில் ஒன்று சேர்ந்து, இங்கு மூன்று மார்க்கங்களின் லக்ஷணங்கள் வெவ்வேறு என்றபேதத்தை அவன் ஒழித்து ஒரே மார்க்கத்தில் நிற்கும் ஜீவன்முக்ததசையை அடைகிறான். அதன் பிறகு பரிபூர்ண ஞானத்தையும், பக்தியையும், கிரியாசக்தியையும், அடைந்த ஜீவன்முக்தன் உலகத்திற்கு கைங்கரியம் செய்வதையே விரதமாகப்பூண்டு ஈசுவரனுடைய சிருஷ்டியில் அதிகார புருஷனாகிறான். இவ்விதமான விஷயங்களை விசாரிப்பது மூலமாயும், அவைகளைக் குறித்து சிந்திப்பது மூலமாயும், அவ்வித பதவிகளை அடைய வேண்டுமென்ற அவாவானது அதிகரிக்கின்றது. பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களுக்கு மனோநிடத்தையும் இந்திரிய நிக்கிரகத்தையும் கொடுத்தது. அவர்கள் உலகத்தார்களுக்குள் உறைந்திருப்பினும் உலகத்தார்களோடு சம்பந்தமில்லாதது போலும், அவருடைய உலகம் வேறுபோலும், இருந்து வந்தனர். பிரஹ்மஞான சபையைச்சேர்ந்தோர்கள் உலகத்திற்கு க்ஷேமகாமான ராஜரீகம், வியாபாரம், விவஸாயம், முதலிய லௌகிகாபி விருத்திகளில் பிரவேசித்து உழைக்கிறதில்லையென்றும், அவர்கள் தங்களுடைய தேசம், ஜாதி, என்றஅபிமானத்தைக்கைக்கொண்டு அவைகளின் பெருமையை அதிகரிக்க முயலுகிறதில்லையென்றும், அவர்களின் ஆத்மசுயநலத்தை நாடி சாஸ்திர ஆராய்ச்சி தியானம் முதலியவைகளை அப்பியஸித்துத்தனித்து நின்று வந்தார்களென்றும், ஒரு அவதூறானது அதிகரித்தது. ஆனல்

பிரபஞ்சமானது அசுவத்தம் என்ற அரசமரத்திற்கு சமானமாகச் சொல்லப்படுகின்றது. சாதாரண அரசமரத்திற்கு வேருனது பூமியிலும் கிளைகள் ஆகாசத்திலும் இருக்கின்றன. பிரபஞ்சமாகிய அசுவத்த மரத்தின் வேர்களோவென்றால் சூக்ஷமலோகங்களை ஆதாரமாகக்கொண்டு பூமியில் கிளைகளையுப் தளிர்களையும் புஷ்பங்களையும் பரவும்படி செய்து தலைகீழாக நிற்கின்றது. ஆகையால் பிரஹ்மஞான சங்கமானது வருங்காலங்களில் இவ்வுலகமெங்கும் பரவி நிற்கும் பிரவிருத்திகளுக்கு சரியான அடிப்படையை சூக்ஷமலோகங்களில் வைத்து சரியான அஸ்திவாரத்துடன் கட்டடத்தை கட்டுவதுபோல ஆத்மஞானம் கல்விமுதலிய பிரவிருத்திகளை முதலில் கைக்கொண்டது. பிரஹ்மஞான சபையின் மூலமாய் முதலில் பெரிய சமயங்களும் மதங்களும் பலத்தை யடைந்தன. நாஸ்திகவாதத்தினுடைய பலம் குறைந்து, ஆஸ்திக புத்தியும் ஈசுவரபக்தியும் தலைதூக்கின உலகத்திலுள்ள பிரதான மதங்களாகிய ஸநாதன தர்மம் பார்ஸீகமதம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலிய வைகளுக்குள் உள்ள வைஷம்யத்தைத் தவிர்த்து அவைகளினுடைய மூலம் ஒன்றே என்ற தத்துவத்தை நிலைநிறுத்தி, அவைகளுக்குள் இயற்கையாயுள்ள சகோதர பாவத்தைப்பலப்படுத்தியது. அநேக ஆயிரம்வருஷங்களாக ஜாதிகளுக்கும் மதஸ்தர்களுக்கும் உண்டாகிய வேறுபாடுகளால் நேரும் துவேஷத்தையும் அருவருப்பையும் போக்கடித்தும் ஈசுவரனின் அம்சபூதர்களாகிய எல்லா ஜீவர்களும் சகோதர பாவத்தை அந்தரங்கத்தில் அடைந்தவர்களே என்ற தத்துவத்தை போதித்தும், நாகரீகம் மனோநோக்கம், ஆசாரம், கால இயற்கை, தேசநிலை, இவைகளால் ஏற்பட்ட வித்தியாசங்கள் வெளிப்படையாய்த் தோன்றும் வித்தியாசங்களே யன்றி, உண்மையான வித்தியாஸங்கள் அல்லவென்றும், வற்புறுத்தினது பிரஹ்மஞானசங்கத்தின் மேற்சொல்லிய வேலையாயிருக்கிறது. அதை ஆத்மா சம்மந்தமான வேலையென்றே நாம் சொல்லத்தகும்.

ஆத்மாவிற்கு ஸ்வஸ்தானமான லோகங்களைக்காட்டிலும் கீழான லோகமாகிய மனோலோகத்திற்குரிய வேலைகளை பிரஹ்மஞானசபையானது அதற்குப் பிறகு கைக்கொண்டு செய்யத்தலைப்பட்டது. அதற்கு உதாரணமாக 1897-98-ஆம்

வருஷம் வாக்கில் இப்பொழுது பிரஹ்மஞான சபையின் அக்கிராஸம் வகிக்கின்றன மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்களின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு, சரியான வித்தியா அபிவிர்த்தியைச் செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஸெண்டரல் ஹிந்துகாலேஜ் என்ற பிரதான இந்து கர்லேஜைக் கூறலாம். அந்த கல்லூரிதான் பின்பு ஸ்தாபிக்கப்பட்ட இந்து சர்வகலாசாலைக்கு, ஒரு அங்குரம் போல் ஏற்பட்டது. அந்த இந்து பிரதான காலேஜ் ஏற்படுத்தப்பட்ட பிறகுதான், இந்தியாவில் பற்பல இடங்களில் அது போன்ற வித்தியாசாலைகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. அந்த வித்யாசாலைகளில் இந்துசிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அவரவர்களுடைய நால் வகை அம்சங்களிலேயும், அதாவது, அவர்களுடைய ஸ்தூல சரீரம், இச்சை, மனஸ் ஆத்மா என்ற நான்கு பாகங்களிலேயும், ஒழுங்காகவும், ஸமரஸமாகவும், வளரச்செய்து அதன் மூலமாய் ஜீவனுக்கு உண்மையான தேசீயக்கல்விகொடுக்கப்பட்டு வருகின்றது. கல்வியானது புத்தியை மட்டும் கூர்மையாகவும் தெளிவாகவும் செய்தல் போதாது. கல்வியினால் ஆத்மா என்ற தத்துவமானது மாணாக்கனிடத்தில் உளதென்று கற்பிக்கவேண்டும். அந்த மாணாக்கன் இப்பொழுது ஜன்மமெடுத்திருப்பதில் அந்த ஜன்மத்தை பலனோடு கூடியதாய்ச் செய்வதற்கு அவனுடைய எல்லா சக்திகளையும் வெளித்தோன்றும்படி செய்வதுதான் முக்கியம். மாணாக்கனானவன் அவனுடைய இச்சைகளையும் உணர்ச்சிகளையும் சுத்திசெய்து அவனுடைய கடமைகள் இன்னவென்று தெரிந்துகொண்டு பரோபகாரம், தேசாபிமானம், தன்னை அடக்கி ஆளுதல், முதலில் லக்ஷணங்களைத் தன்னிடத்தில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஈசுவரன் உலகச்சிருஷ்டியில் சௌந்தரியத்துடன் வெளித்தோன்றி நிற்பதால் அந்த சௌந்தரியத்தை அறிகிறதற்கு பல சித்திர சாஸ்திரங்களையும் சங்கீதத்தையும் அப்பியஸித்து அவைகளின் மூலமாய்ப் பிரபஞ்சத்தில் அமைக்கப்பட்ட அழகான வடிவங்களையும் நாதங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். மனிதனுடைய ஸ்தூல சரீரமானது அவன் விகாஸமுறையில் மேல்சொல்லுவதற்கு இடையூறாக ஏற்பட்டதல்ல. அந்த ஸ்தூல சரீரத்தை நன்றாக அடக்காவிடின் அது அவ்வித இடையூறாகுமென்பதில் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்)

அ. ரெங்கஸ்வாமி ஐயர்.

குருபூஜை.

ஹடயோகி—உம். எவ்வளவோ ஸாதனங்களெல்லாம் செய்தேன்! பயனென்ன? புனர்ஜன்மமோ என்னைவிட்ட கலுவதில்லை.

ராஜயோகி.— என்ன ஸாதனம் பண்ணி என்ன பிரயோஜனம், ஐயா?

ஹட.— பின் என்னசெய்தால்தான் புனர்ஜன்மத்திலிருந்து தப்பலாம், நண்பரே?

ராஜ.— எப்படி புத்திரகாமேஷ்டி யாகத்தினல் தசரதர் புத்திரர்களைப் பெற்றாரோ, அப்படியே குருபூஜையால் முமுக்ஷுத்துவத்தைப் பெறலாகும்.

ஹட.— குருபூஜை எப்படிச் செய்வது?

ராஜ.— சுவாமியே மனுஷ்யாவதாரம் எடுத்தால் அவரை எங்ஙனம் பூஜைசெய்வீரோ, அங்ஙனமே குருவை பூஜைசெய்வது.

ஹட.— அப்படி குருபூஜைசெய்தால் புனர்ஜன்மத்திலிருந்து தப்பாமல் விடுபடலாகுமோ?

ராஜ.— என்ன சந்தேகம் ஐயா? ரணகளத்தில் சாகும் தருவாயில் இருந்த லக்ஷ்மணதிகள் ஸஞ்சீவி மூலிகையின் வாஸனை பட்டமாத்திரத்தில் எப்படி சாவை தவிர்த்தார்களோ அப்படியே "பகவானே மனுஷ்ய ரூபமாக இருக்கிறார்" என்பதாக எண்ணி குருபூஜை செய்யத்தொடங்கும் க்ஷணத்திலேயே சூரியனைக்கண்ட கன இருள்போல பிறப்பும் இறப்பும் பறந்தோடவேண்டாமா?

ஹட.— அப்படியா! வெகுசந்தோஷம்!! நண்பரே, ஸத்குருவை என்னை ஈன்றதந்தையென்று பாவித்துப் பூஜை செய்யலாமா?

ராஜ.—ஸத்குருவை அவமதிக்கிறீரே, உமது தந்தையோ இந்த ஒரு ஜன்மத்திற்குத் தந்தை. ஸத்குருவோ இந்த ஒரு ஜன்மத்திற்கு மாத்திரம் தந்தையல்ல. இனிப் பிறந்தாலும் அவரே தந்தையும் தாயும். அதுவுமல்லாமல், உமது தந்தையோ உமக்கு மாத்திரம் தந்தை. ஸத்குருவோ உலகத்திற்கே தந்தையும் தாயுமாவர்.

ஹட—என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்த எனது அன்னையைப்போல் பாவிக்கிறேனே?

ராஜ—பிரயோஜனமென்ன. உமது அன்னையோ உம்மைப்பெற்றது முதல் நேசிக்கிறாள். உம்முடைய குறையை நீக்கிக்குணத்தைக் கொண்டாடுகிறாள். ஆனால், உமக்குக் கர்மவசத்தாலுண்டான சுக துக்கத்திலிருந்து காப்பாற்றமுடியுமா? குருவோ உமக்கு முமுக்ஷுத்வத்தைக்கொடுத்து சகல அவஸ்தைகளிலுமிருந்து தப்புவிக்கிறார். இப்படிச்செய்வதில் உமது மாதாவைவிட லக்ஷமடங்கதிகமாக நேசிக்கிறார் என்றறியும். இல்லாமற்போனால் உம்மை ஜனன மரண ஸம்ஸாரசக்கரத்திருந்து விடுவிப்பாரா?

ஹட—என்னுடைய பள்ளிக்கூட உபாத்தியாயரைப் போல் பூஜிக்கலாமா?

ராஜ—கொஞ்சமேனும் குணமில்லை. இந்த உபாத்தியாயர்கள் எல்லாரும் சம்பளத்திற்கு உழைக்கும் கூலியாட்களே. இவர்களால் என்னசெய்ய முடியும் எந்த உபாத்தியாயர் மறுபிறவி இல்லாமல் செய்வாரோ அவரே ஸத்குரு, அவரே குருநாதன், அவரே சகலமும்.

ஹட—என்ன குலதெய்வம் என பஜிக்கலாமா?

ராஜ—ஒரு குணத்தையும் காணோமே. கலியாணம், கார்த்திகை, வந்தால் குலதெய்வத்தை சாதாரணமாகக் கொண்டாடுவது வழக்கம். குருநாதனையோ ஸதா ஸர்வ

காலமும் மனசா வாசா கர்மணா பஜிக்கவேண்டும். நமதிஷ்டம்போல் நடக்கலாகுமோ? சகலமும் அவர் திருவிளையாடலே. நம்மை ஒரு பொம்மை போலும் அவர் ஒரு ஸூத்ரதாரிபோலும், அவர் அவரிஷ்டப்படி எப்படி யாட்டுகிறாரோ அப்படியே ஆடுகிறோமென்றுமல்லவா நினைக்கவேண்டும். ஆனால் குருநாதனை உம்முடைய குலதெய்வத்திற்குக் குலதெய்வம் என்று நம்பினால் கிட்டத்தட்ட சரியான வழி என்று சொல்லலாம்.

ஊட—அல்லது கல்பகவிருக்ஷமென்று பூஜிக்கலாமா?

ராஜ—என்ன புத்திசாலி, ஐயா, நீர்! யோஜித்து யோஜித்து நன்றாய் சொன்னீர்! கல்பகதருவோ நீர் இச்சிப்பதை எல்லாம் தரும். குருநாதரோ நீர் இச்சிப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கக்கூடிய இடத்தைக்கொடுக்கிறார். கல்பக தரு கொடுப்பதே அழிவுள்ளது. ஸத்குரு அளிப்பதோ அழிவற்றது. எது ஐயா விசேஷம்? உம்மிடமிருந்து இதற்கு பிரதியுபகாரம் குருநாதர் எதிர்பார்ப்பதில்லையே.

ஊட—நல்லது ஐயா காமதேனுவென்று பூஜை செய்கிறேன்.

ராஜ—பலே! பேஷ்!! மரத்திலிருந்து மாட்டிற்கா வந்தீர்? காமதேனு கல்பகவிருக்ஷம் இதுகள் நீர் கேட்டதைத்தவிர வேறெதையும் கொடுக்கச்சக்தியற்றது. குருநாதரோ வென்றால் பூலோக, புவர்லோக, ஸுவர்லோக, சுகங்களைவிட அதியுன்னதமான பிரமானந்தத்தை அளிக்கின்றார். அது பரமாத்மாவே அனுபவிக்கும் சாசுவத ஆனந்தமே.

ஊட—ஐயா, இது சரி, இதெல்லாம் வேண்டாம். கரையின்றி கம்பீரமான கருங்கடலென்றே ஆராதிக்கிறேனே,

ராஜ—சொல்லுகிறேன் கேளும் சற்று கவனமாய். சமுத்திரமோ கரையற்றதே, கம்பீரமானதே, ஆனாலும் சமுத்திர ஜலமோ உப்பு ஜலம்.

ஐயா, ஸத்குருவின் அளவிடக்கூடாத பக்தி, சக்தி, சமம், சாந்தம், விடாமுயற்சி, பரநலம் பாராட்டுதல், தீனதயாளுத்வம், ஸௌசீல்யம், ஸந்தோஷம், வாக்சாதுர்யம், மதுரம், மௌனம், தீரம், கம்பீரம், விவேகம், ஔதார்யம், ஸௌந்தர்யம், முதலான குணாதிசயங்களுக்கு எதைத்தான் ஒப்பிடுவீர் ஆதியந்தமில்லாமல் சுயம்புவான பராபர வஸ்துவுக்கு ஒப்பிட்டாலும் போதாது.

ஏனென்றால், குருநாதன் உபதேசமில்லாமல் அந்த பராபர வஸ்துவை எப்படி அறியக்கூடும். பால்மாறாப் பச்சைப்பாலனான துருவன் கூட நாரதமஹாமுனீந்திரரிடம் உபதேசம் பெற்றுத்தான் பரமாத்மாவை அறியத் தவம் புரிந்து தரிசித்தனன். குருநாதன் உதவி இல்லாமல் போனால் "கடவுள்" என்ற பதத்திற்கே அர்த்தமில்லை எனலாகும்.

நமது சுருதி, ஸ்மிருதி, புராண, இதிஹாஸாதிகளில் வெளிப்படையாகச் சொன்ன அர்த்தங்களைவிட அவைகளில் ஒவ்வொரு பதத்திற்கும் உத்தரார்த்தம் வேறு இருக்கிறது. அது மரு, மைத்ரேயர், முதலிய குருநாதர்களே எடுத்துரைக்கக்கூடுமே ஒழிய மற்றவராலாகாது. ஆகையால் மூன்று லோகங்களிலும் குருநாதனைவிட பூஜைக்குரியவர் யாருமே கிடையாது என்று திட்டமாய்ச்சொல்வேன்.

எவ்வண்ணம் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீ வாஸுதேவனை வஸுதேவரும் தேவகியும் குழந்தை ரூபமாகவும், கோபீ கோபாலர்கள் குலதெய்வமாகவும், ருக்மிணீ சத்தியபாமை ப்ரேமா ரூபமாகவும், ரிஷி ரிஷிபத்தினிகள் குரு ரூபமாகவும், அனந்த, கருட, விஷ்வக் ஸேனாதிகள் இந்த கபட நாடக ஸூத்ரதாரி ஸ்ரீமந்நாராயணனே என்று நன்றறிந்து சேவாரூபமாகவும், அர்ச்சித்தார்களோ அவ்வண்ண

மே உத்தமசிஷன் ஸத்குருவை இந்த சகல ரூபத்திலும் பார்க்கக்கடவன். ஏகாக்கிரசித்தனுப் குருநாதன் உருவம் தவிர வேறெதையும் நினைக்க வல்லவனல்லன்.

ஹரிச்சந்திரன் எப்படி சதியிழந்து, பாலனை யிழந்து. படைத்த நிதி யிழந்து, தாங்கக்கூடாத துக்கத்தையும் கஷ்டத்தையும் தாங்கி தனது ஸத்குருவை சத்தியரூபமாகச் சந்தித்தனனே; ஸீதை, தமயந்தி முதலிய ஸ்திரீ ரத்னங்கள் எப்பிரகாரம் பதி யிழந்து, பாரை யிழந்து, படைத்த தனமிழந்து, வாக்கினுல் சொன்னுலும் சகிக்கக்கூடாத துக்கத்தையும் சிரமத்தையும் பொறுத்து அவரவர்கள் குருநாதனைப் பதியுருவாகப் பெற்றனர்களோ, அப்படியே ஸச்சிஷனுனவன் பிராணுபத்தே வந்தபோதிலும், வானமே இடிந்து தலையில் விழுந்தபோதிலும், பூமியே பிளந்து விழுங்க வந்தபோதிலும், குருநாதரை விட வேறெவரையும் நினைக்கச் சக்தியற்றவனுயிருக்கக்கடவன். கஜேந்திரன் அந்தக் கரண சுத்தியுடன் "ஆதிமூலமே" என்று ஆலறியது போல், "குருதேவ" என்று கூச்சமில்லாமல் கூறக்கடவன்.

ஆகையால், நண்பரே, உம்முடைய மனதை குருதேவருடைய பாதபத்மங்களில் ஸமர்ப்பியும். அவருடைய உத்தம பக்தராயிரும் அவரையே யாசியும் அவரையே சரணமடையும். அப்பொழுது நீர் அவர் அருகாண்மையில் அணுக அர்ஹராவீர். அவர் ஆசீர்வாதம் பெறும் பாக்கியம் பெறுவீர். இது சத்யம். இது உண்மை.

ஓம் தத் ஸத்.

V. R. சுந்தரராஜ அய்யங்கார்,

குண்டக்கல்.

பிரஸிடெண்டு வில்ஸன் அவர்கள் உபந்யாஸம்

உலகத்தின் சுதந்திரத்தின் பொருட்டு நிகழும் இவ்வி யுத்தத்திற்காக அமெரிக்காவில், ஐக்கிய மாகாணங்களில் நான்காவது யுத்தக்கடன் வாங்கத்தலைப்பட்டிருக்கிறார்கள். அந்நான்காவது கடனுக்கு சுதந்திரத்திற்காக வாங்கப் படும் கடன் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதைத்துவக் கும் சமயத்தில் அம்மாகாணங்களின் தலைவரான பிரஸி டெண்டு வில்ஸன் அவர்கள் அடியில்கண்டவாறு பிரசங் கம் செய்தார்கள்:—

உலகத்தாரின் சுதந்திர அபிவிருத்தியின் பொருட்டு வாங்கப்படும் 600,00,00,000 டாலர் கடனுக்கு நீங்கள் எல்லாரும் தாராளமாகவும் உற்சாகமாகவும் பணம் கொடு த்து வரவேண்டுமென்று சொல்வதற்காக நான் இங்குவர வில்லை. உற்சாகமாகப்பண உதவி செய்வதற்குலக்ஷக்கணக் கான தேசபக்தர்களும் உற்சாகசீலர்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத்தெரியும். இந் நாட்டிலேயே ஜனங்களுடைய ஆர்வமும், இத்தேசத்துப் பெரிய தனிகர்களுடைய அனுபவத்துடன் கூடிய தேசவிசு வாசமும் எனக்கு நன்றாகத்தெரிந்தவை. ஆகையால் இக் காரியமானது சுலபமாகவும் சீக்கிரமாகவும் நிறைவேற்றப் பெறும் என்பதை நான் நன்கறிவேன்.

ஆனால் நான் இப்போது தங்களுக்குத் தெரிவிக்க வேண்டி முன்வந்தது என்னையோவெனின், கூறுவேன். சுயநலம் கருதாமலிருப்பதுடன் அந்நலத்தை பரித்யாகம் செய்துகூட, நீங்கள், இப்பெரும் காரியத்தில் தலையிட்டிரு க்கிறஇராஜாங்கத்தைப்பணத்தினாலும் மனுஷ்ய சகாயத்தா லும் ஏன் உபகரிக்கவேண்டும் என்பதை நான் விளக்கிக் காட்டுவேன். இந்த மகத்தான லோக யுத்தத்தில் தீர்மான மாகவேண்டிய முக்கிய அம்சங்கள் எவை என்பதைத்தெளி

வாகவும் சந்தேகத்திற் கிடமில்லாமலும் அறிந்து தெளிய வேண்டிய தவசியமாகையால், அவ்விஷயமாய் என்மதில் தோன்றியுள்ள எண்ணங்களைத் தங்களுக்குக் கூறலாம் என்று எண்ணி தங்கள் முன் நிற்கிறேன். இவ்வியுத்தமானது எதற்காக பிரவிருத்தித்திருக்கிறது? இதன் உண்மையான காரணம் என்ன? என்று அறிந்துகொண்ட ஒரு புமானவது ஸ்திரீயாவது தன்னிடத்திலுள்ள சகலத்தையும் பரித்தியாகம் செய்யப்பின் வாங்கமாட்டார் என்பது என் துணிபு. ஆகையால் இவ்வியுத்தத்தின் உண்மையைத் தங்களுக்கு விளக்குவதே என் நோக்கமாகும். அவ்வுண்மையைத் தாங்கள் ஒருவாறு கண்டு கொள்வீர்களாயின், அப்பால் தங்கள் கடமையை நிறைவேற்றும்படி தங்களைத் தூண்டவேண்டிய அவசியமே யிராது. யுத்தம் நடைபெற்றுவரும் பொழுதே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவ்வியுத்தத்தின் பயனாக என்ன நிகழவேண்டும் என்பது நமது மனதில் உதிக்கின்றது. முன்னைக்காட்டிலும் இப்போது வியக்தமானதும் தெளிவானதுமான எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன. இவ்வியுத்தம் தொடங்கும்போது இந்தக் காரியத்திற்காகத்தான் தொடங்கினதாகச் சொல்லமுடியாது. ஆனால் இக்கோரப்போரின் முடிவான உயர் நோக்கத்தைத் தடுக்கவும் முடியாது. இந்த மேலான, உண்மையான, நோக்கத்தை ஒரு ராஜதந்திரி அல்லது ராஜசபை உண்டுபண்ணவில்லை. அவர்கள் அது நிறைவேறுவதைத்தடுக்கவும்இயலாது. இந்த யுத்தத்தின் இயற்கையினின்றும் சந்தர்ப்பங்களினின்றும் இந்நோக்கங்களை நாம் அறியவேண்டும். ராஜதந்திரிகளும் ராஜசபைகளும் செய்யக்கூடியது ஒன்றே. அதாவது இந்நோக்கத்தை நிறைவேற்றலாம். அல்லது அந்நோக்கத்தை அலக்ஷியம் செய்துவாளா விருக்கலாம்.

ஆரம்பத்தில் வியக்தமாக இந்நோக்கம் வெளியாகாமலிருக்கலாம். ஆனால் இப்போது வரவரத்தெளிவாகத்தெரிகிறது. யுத்தம் தொடங்கி 4 வருஷங்களாகின்றன. உலகம் முழுவதுமே இவ்வியுத்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது,

யுத்தத்தில் சேர்ந்திருக்கிற ஒவ்வொரு தேசத்தாரின் தீர்மானத்திற்குப் பதிலாக, பொதுவாக மானிடசமூகத்தின் திண்ணமான உறுதி யென்னவென்று நாம் அறிய வேண்டியிருக்கிறது. இச்சண்டை துவங்கியது ஒரு தேசத்து ராஜதந்திரியின் செயலாலிருக்கலாம். ஆனால் இவராவது இவர் விரோதியாவது அவரிஷ்டப்படி இவ்வியுத்தத்தை நிறுத்த முடியாது. இது ஜனங்கள் சண்டை யென்று சொல்ல வேண்டுமே யொழிய ஒரு தேசத்தாரின் சண்டையில்லை. சகல விதமான ஜாதியாரும், சகல விதமான பலபராக்கிரமக் கிரமங்களை யுடைய நாட்டாரும் சேர்ந்திருக்கிறார்கள். இந்தச் சண்டையின் முடிவில் மேற்கூறிய யாவருக்கும் சம்மந்தமிருக்கின்றது. இந்த யுத்தத்தின் தன்மையானது நன்றாக வெளியான பிறகு தான் நாம் இந்த யுத்தத்தில் சேர்ந்தோம். ஒரு ஜாதியாரும் இதைச்சேராமல் ஒதுங்கி நிற்றல் தகாது என்றும், இதன்முடிவில் ஒருசாதியாரும் சம்மந்தமில்லை யென்று அலக்ஷிய மாயிருத்தல் முடியாது என்றும் தெரிந்த பிறகே, இந்தச்சண்டையில் நாம் தலையிட்டோம். நாம் எது மேலானதென்றும், எது போற்றத்தகுந்தது என்றும் கருதுவோமோ அதையெல்லாம் காப்பாற்றுவதற்காகவும், பற்பல தேசங்களிலிருந்த நமது சகோதரர்களுடையவும் கடலில் முழுக்கப்பட்ட நம் தேச சகோதரர்களுடையவும், மறுக்க முடியாத இரக்கமான பிரார்த்தனைகளுக்கு இணங்கியும், நாம்இந்த யுத்தத்தில் பிரவேசித்தோம். நாம் ஒருவித மயக்கத்துக்கும் உட்படவில்லை. உள்ளதை உள்ளவாறு அறிந்து கண்ணைத்திறந்து கொண்டு தான் யுத்தத்தில் புகுந்தோம். இன்னும் நாம் ஒருவித மயக்கத்துக்கும் உள்ளாகாமல் தான் இருக்கிறோம். இவ்வியுத்தத்தில் தீர்மானமாகவேண்டிய விஷயங்கள் யாவை என்பதை நாம் வியக்தமாய்த்தெரிந்து கொண்டிருக்கிறோம். மற்ற தேசத்துத்தலைவர்கள் சொல்லும் வார்த்தைகளால் நாம் கொஞ்சமும் மயக்குறவில்லை. ஆகையால் இந்த மகாயுத்தத்தில் தீர்மானமாகவேண்டிய விஷயங்கள் நாம் கருதியவாறு

நேராக முடிவு பெற்ருல் ஒழிய ஏனையோர் சொல்லும் முடிவை நாம் ஏற்றல் தகாது.

இவ்வியுத்தத்தில் தீர்மானமாக வேண்டிய முக்கியமான அம்சங்கள் யாவை?

புஜபல மல்லாது, வேறு ஒருவித பாத்தியமும் இல்லாமல் ஒரு தேசத்தார் மற்ருெரு தேசத்தாரை அடக்கியாளும் படிக்கும், அத்தேசத்தாரின் அபிவிருத்தியை தங்கள் இஷ்டப்படி தீர்மானிக்கும்படிக்கும், ராணுவ பலத்தையுடைய ஒரு தேசத்தாருக்காவது தேசத்தார்களின் சங்கத்துக்காவது அதிகார மிருக்கும்படி வைத்தல் தகுதியா?

தங்கள் இஷ்டப்படிக்கும் தங்கள் சௌகரியம் போலவும் தங்கள் லாபத்திற்கேற்றவாறும் பலமுள்ள தேசங்கள் பலஹீனமான சிறிய தேசங்களை ஆக்கிரமிக்கும்படி விடுதல் தகுதியா?

ஒரே தேசத்திலும் கூட ஜனங்களுடைய இஷ்டப்படிக்கும் தீர்மானத்தின்படிக்கும் அவர்களை ஆட்சி செய்கிறதா அல்லது அரசாட்சியார் இஷ்டபடி, ஜனங்களுக்குப் பொறுப்பு இல்லாமல் ஆளுவதா?

சகல தேசத்தார்களுக்கும் ஜாதியாருக்கும் பொதுவாக நியாயம் அல்லது தர்மம் என்பது உண்டா அல்லது வல்லவன் மனம் போல் வேண்டியது செய்ய எளியோன் திக்கற்று அதைத் தவிர்க்க வழியற்றுத் திகைத்து நின்று சகிப்பதா? பொதுவான தர்மத்தை ஸ்தாபிப்பது எங்ஙனம்? சில தேசத்தார் மட்டும் சேர்ந்து இஷ்டப்பட்டால் தர்மத்தை ஸ்தாபிக்கிறதா அல்லது பொதுவான நியதி ஏற்படுத்துவதா?

இந்த விஷயங்களைத் தீர்மானிக்கவேண்டி ஒரு குறிப்பிட்ட மனிதன், அல்லது சங்கம், கூறுவதாகச் சொல்லல்ல முடியாது. ஆனல் அவைகள் ஸ்வதஸ்ஸித்தமாக ஏற்

பட்டிருக்கின்றன. எளியோனுடைய உரிமையானது வலி யோனுடைய உரிமையைக்காட்டிலும் எள்ளளவும் குறைந்த தல்ல, ஆனல் அதுவும் யாவராலும் பாராட்டத்தக்கது, என்ற திட்டமான தீர்மானத்தை சந்தேகமற, கள்ளம் கபடமின்றி, வியக்தமாக, செவ்வனே, எல்லா தேசத் தாரும் திண்ணமாக ஒத்துக்கொள்ளவேண்டும். இந்த உறுதி க்குமாறுன ஒரு சமாதானமாவது, ஏற்பாடாவது, மேற்கூ றிய அம்சங்களை தீர்மானம் செய்யக்கூடாது. சாசுவதமான சமாதானம் வேண்டும். என்று நாம் பேசும்போது உண்மை யுடனும், அறிவுடனும், பேசுவோமானல் மேற்கூறிய உறுதியைக்கைக்கொண்டால் தான் அது நிகழும். சாசுவத மான சமாதான மின்றி வேறுவிதமான போலிச்சமாதனம் அல்லது ராஜி, அல்லது வேறு ஏற்பாடு செய்ய ஜர்மானிய ரோடு முயல்வோம் என்ருல், அது சமாதானமாகாது என் பது நமக்குநன்ருகத்தெரியும். அவர்களுடைய முந்திய வார் த்தைகளை நம்பி மோசம்போன அனுபவமும் நமக்குண்டு. மேலும் பிரஸ்டுலிடவுஸ்கு, புகாரஸ்டு என்ற இரண்டு இடங்களில் நடந்த உடன்படிக்கைகளில் அவர்கள் மற்ற ஆட்சியார்களோடு எவ்விதமாய் உடன்படுகிருர்கள் என்ப தையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். அவர்களது வார்த்தையில் கௌரவம் வைக்கக்கூடாது என்பதையும் அவர்கள் நியாயத்தைக் கருதியவர்களில்லை யென்பதையும் அவர்கள் நமக்கு நன்கு நிரூபித்திருக்கிருர்கள். அவர்கள் ஒரு ஒப்பந்தத்திற்கும் அடங்கி நடப்பவர்களல்லர். புஜபல மும் சுயநலமும்தான் அவர்போற்றும் தெய்வம். அவர்களோ டு ஒரு உடன்பாடும் செய்ய இயலாது. அவர்களே அதற்கு காரணமாயிருக்கிருர்கள். நம்மை இக்கடும் போரில் பல வந்தமாய் இழுத்தவர்களுடைய ஒரு வார்த்தையையும் கூட நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜர்மானிய ஜனங் களுக்கே இப்போது விசதமாகும். நம்முடைய எண்ணங் களும் நமது எதிரிகளுடைய எண்ணங்களும் முற்றிலும் வேறுபட்டவையாகும். இருவரும் உபயோகிக்கும் பாஷை

களே வேறு என்னலாம். நாம் எந்த நியாயங்களுக்காகச் சண்டையிடுகிறோம் என்று கூறுகிறோமோ அந்த நியாயங் கள் குன்றக்கூடிய எவ்வித சமாதானமும் ஏற்பாடும் இந்த யுத்தத்தின் முடிவாகக்கூடாதென்பதை நாம் உறுதி யாயும் தெளிவாகவும் வற்புறுத்தவேண்டும். அதைப்பற்றி யாதொரு ஐயுறவும் இருத்தல் கூடாது.

ஆகையால் இது சம்மந்தமாக இவ்வுண்மையை ஊர் ஜிதத்துக்கு கொண்டுவரும் முறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப்பற்றி நான் தெளிவாகவும் உள்ளவாறும் சிலவார்த்தைகள் கூறத்துணிகிறேன். ஜர்மானியருக்கு எதி ர் திறப்பில் ஒருங்கு சேர்ந்திருக்கும் ஆட்சியாரும் அவ்வா ட்சிக்குள்ளடங்கிய ஜாதியாரும் சாசுவதமான ஸ்திரமான சமாதானத்தை விரும்புவதாகக் கூறுகிறார்கள். அவர்கள் உண்மையாகவே அதனை விருப்புவதாக நான் நம்புகிறேன். அவரது விருப்பம் உண்மையானால் இனிமேல் சமாதானம் பேசுவதற்காகக்கூடும் ஸதஸில் அவர்கள் வந்து கூடும்போ து ஒவ்வொருவரும் மேற்கூறிய சமாதானம் நிகழ்வதற்கு இன்றியமையாததான விலையைக்கொடுக்கச் சித்தமாக விருக்கவேண்டும். மேலும் சமாதானத்தின் நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கும் அவை நிறைவேறாவிட்டால் அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கும் எந்தக் கருவி வேண்டுமோ அக்கருவியைச் சமைத்தற்கு ஆயத்தமாகவா வேண்டும். சமாதானம் நிறைவேறுவதற்கு ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டிய விலை என்னையோ வெனில் கூறுவோம். சமாதானத்தில் தீர்மானமாகும் ஒவ்வொரு விஷயத்திலும் சார்பின்றி, முறைபிறழாத, நியாயமானது நிகழவேண்டும். அவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டவர் எத்திறத்தாராயினும் எளியோராயினும், வலியோராயினும், நீதிகோடாமல், நியா யம் வழுவாமலிருக்கவேண்டுவது அவசியம். அத்தீர்மான மானது சம்மந்தப்பட்டவர்களுக்குத் திருப்திகரமாயுமிருக் கவேண்டும். அதுதான் ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டிய விலை. சமாதானத்தை நிறைவேற்று வதற்கு இன்றியமை யாத கருவியாதெனின், "தேசஜாதியார்களின் சபை". அச்

சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் போதிய வல்லமையை அது உடைத்தாயிருத்தலவசியம். அவ்வல்லமையைப்படைத்தற்கு வேண்டிய உடன்படிக்கைகளை இச் சமாதான சபையில் செய்தலவசியம். இவ்விதமாகச்சக்தி வாய்ந்த கருவியில்லாவிடின், சமாதானம் நிலைத்தற்கு எதை உறுதியாகக்கொள்ளலாம்? நீதிக்கடங்காத நியாயபாஹியனுடைய வார்த்தையைத் தவிர வேறு என்ன உறுதியிருக்கின்றது? சமாதான ஸதஸில் சொல்லும் வார்த்தையினாலா ஜர்மானியருடைய உண்மையை நிச்சயிப்பது? வருங்காலத்தில் ஏற்படக்கூடிய நடத்தையினாலன்றோ அதனை நிச்சயிக்க வேண்டும்?

என் அபிப்பிராயம் என்னவென்றால், தேசஜாதியாரின் சபையின் அமைப்பு என்ன, அதன் நோக்கம் என்ன, என்பதை தெளிவாக அச்சமாதான ஸதஸில் தான் நிச்சயிக்க முடியும். அக்காலத்தில் முடிவாகவேண்டிய சங்கதிகளில் அதுதான் முக்கியமான விஷயம் என்று சொல்லுவேன். அவ்விஷயத்தை இப்போது தீர்மானிக்க முடியாது. அத்தகைய சபையை இப்போது ஏற்படுத்துவோமானால் ஒரு பொதுவான சத்துருவுக்குமாறாக ஏற்படுத்தப்பபட்ட சேர்க்கையாக முடியுமேயொழிய வேறில்லை. அவ்வித சபையானது சமாதானத்திற்குப் பிறகு ஏற்படக்கூடியது மல்ல. சமாதானமானது சாசுவதமாக நிகழவேண்டுமானால் அவ்விஷயத்தை உறுதிப்படுத்துவதைப் பின்னொரு சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்பது சரியாகமாட்டாது. இதுவரை வாக்குறுதி யற்றவர்களோடு சமாதானம் செய்ய வேண்டுமானால் அவ்விதச் சமாதானம் உறுதி தான் என்பதை நிச்சயம் செய்தல் அச்சமயத்தில் தான் என்பதைப் பற்றி விசேஷமாய் விரிக்கவேண்டியதில்லை. ருஷியாவை சின்னபின்னமாக்கி, ரூமேனியாவை வஞ்சித்த அரசாட்சியாரை நம்பி சமாதானத்தின் உறுதிப்பாட்டைப்பற்றி பின்னீடு யோசிக்கலாம் என்று விடுவது மதியீனம். ஆனால் இவ்வளவு மட்டும் பொதுப்படையாகக்கூறியது போதாது.

உன் விவரங்கள் சிலவற்றைக் கூறினல் ஒழிய மேற் கூறப்பட்டது ஒரு வியாசமாய் முடியுமேயொழிய செய்ய வேண்டிய விஷயங்கள் என்னவென்று காட்டமாட்டாது. சமாதானம் விஷயமாக தனது கடமையாக இம்மாகாணங் களின் ஆட்சியானது என்ன அபிப்பிராயங்களைக் கொண்டி ருக்கின்றது என்று நான் பொறுப்பாக சொல்லக்கூடுமாகை யால் அதை நான் தைரியமாகக்கூறுவேன்.

1-வது நம்முடைய விருப்பு வெறுப்புக்குச்சம்பந்தமி ன்றி ஒரு பக்கச்சார்புமின்றி எல்லாத்திறத்தாருக்கும் நியா யத்தையே கோடாமல் செலுத்தவேண்டும். பக்ஷபாதமில் லாமலும், சம்மந்தப்பட்ட சகலரையும் சமானமாகப் பாவி க்கும் நியாயம் செலுத்தப்படவேண்டும்.

இரண்டாவது. ஒரு ஜாதியாருடையவாவது ஒருசில ஒ ருங்குபட்ட ஜாதியாருடையவாவது லாபமானது எல்லோ ருடைய பொது நன்மைக்கு முரண்பட்டதாயின் அதை சமாதானத்தில் அங்கீகரிக்கப் படக்கூடாது.

மூன்ருவது. தேசஜாதியாரின் சபையென்ற மேற் கூறிய பொதுவான கூட்டத்திற்குள் சேர்ந்த ஜாதியாருக் குள் ஒரு சிலர்மட்டும் தனிக்கூட்டமாவது, தனி ஏற்பாடா வது, தனிச் சேர்க்கையாவது ஏற்படுத்தல் கூடாது.

நான்காவது. விரித்துக் கூறின் மேற்கூறிய பெரும் சபைக்குள் சிலர் மட்டும சுயநலம் கொண்டு சிலருக்கு விரோ தமாக வியாபார விஷயமாயாவது தனவிஷயமாயாவது தனிச்சேர்க்கை சேரக்கூடாது. ஒருவரை அல்லது ஒரு சிலரை விலக்கி வைத்து அவருக்கு விரோ தமாக அவருடன் வர்த்தகம் செய்வதில்லை அல்லது பணம் கொடுக்கல் வாங்கலில் அவரை பஹிஷ்காரம் செய் கிறது என்ற உள் கழகம் கூடாது. ஆனல் மேற்கூறிய பொது சபையானது அதன் அங்கத்தினரைத் தண்டி த்து நல்வழிப்படுத்துவதற்காக இக்கண்டன முறையைக்

கைக்கொள்ளலாம். ஒரு ராஜ்பத்திற்கும் ராஜ்யாந்தரத்திற்கும் நிகழ்ந்திருக்கும்ஒவ்வொரு உடன்படிக்கையையும்,ஒப்பந்தத்தையும், பகிரங்கப்படுத்தவேண்டும். இதற்கு முன் உலகத்தில் நடந்த சண்டைகளுக்கெல்லாம் காரணமான குரோதத்திற்கும் கொடுமைகளுக்கும் அந்தரங்கமான காரணம் என்னவெனில், சுயநலத்திற்காக சில தேசங்கள் ஒன்றுசேர்ந்து, வேறு சில தேசங்களுடன் வியாபாரப் போட்டிகள் போடுவதுதான் எனக் கூறலாம். இவ்விதப் போட்டிகளை வியக்தமாகத் தவிர்க்காதபோனல், நிகழும் சமாதானமானது சாசுவதமுமாகாது, உண்மையான சமாதானமுமாகாது.

நாம் இது காறும் அனுஷ்டித்து வந்திருக்கிற ஆசரணைகளோடு மேற்கூறியவை பொருத்தமானவை யென்றும் நாம் தேசாந்தரங்களோடு பழகும்போது அனுஷ்டிக்கவேண்டிவை யென்று நான் கொண்டிருக்கும் கொள்கை இவையென்றும் மட்டும் நான் இவ்வாறு தைரியமாய்க் கூறவில்லை. நமது ஐக்கிய மாகாணங்களின் ஆட்சியார் மேற்கூறியபடி தனிச்சேர்க்கைகளில் சேருகிறதில்லை யென்று உறுதி கூறுவதோடு கூட, இனிமேல் நிகழப்போகும் சமாதானத்தை உறுதியாய் நடக்கும்படி செய்வதற்கு வேண்டிய பொறுப்புகளையும் உத்திரவாதத்தையும் வகிக்க நாமும் தயாராகஇருக்கிறோம் என்று நான் பகிரங்கமாகக் கூறுகிறேன். நமது முதல் பிரஸிடெண்டான ஸ்ரீ. ஜார்ஜ் வாஷிங்டன் கூறிய புத்திமதியை நாம் மறக்கவில்லை. அவைகளை இங்கு உபயோகிப்போம். ஒரு தேசத்துடனும் உடன்படிக்கை யென்ற வலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள் என்று உரைத்தார் ஸ்ரீவாஷிங்டன். ஆனல் ஒரு சில ஜாதியாருடன் செய்யும் உடன்படிக்கைதான் வலைபோல் பந்தப்படுத்துமே யொழிய சகல தேசத்தாரும் பொதுவான உரிமைகளையும் பொதுவான நியாயத்தையும், ஸ்தாபிப்பதற்காக ஒரு சேர்க்கையாகச் சேர்ந்தால் அச்சேர்க்கையானது அவ்வித பந்தமாகாது.

தேச தேசாந்தரங்களுக்குள் தற்காலத்தில் நிகழும் ஸ்திதியைப்பற்றி இவ்வளவுதூரம் விஸ்தாரமாக விசாரிக்கக் காரணம் என்னவெனில், நம்முடன் ஒருங்குசேர்ந்திருக்கும் நமது நேச ஆட்சியாரின் தலைவர்களும் ராஜ தந்திரிகளும் என்னுடைய அபிப்பிராயத்திற்கு மாருன தீர்மானங்களைக் கொண்டிருக்கிருர்கள் என்று நினைத்ததால் அல்ல ஆனல் சந்தேசமும், குழப்பமும் அடிக்கடி உண்டாகி, மனிதர்களுடைய தீர்மானங்களையும் கொள்கைகளையும் மயக்குறச் செய்வது இயல்பு. பொறுப்பில்லாத அனேகர் வீணேபிதற்றுவார்கள். உண்மைகளை மறுப்பார்கள். அனேகர் வேண்டுமென்றே குழப்பங்களை உண்டுபண்ணுவார்கள். சந்தேகமற்ற மனதிலும் ஐயுறவை யுண்டாக்குவார்கள். ஆகையால் இவ்வித அழுக்குகளை நீக்கி அடிக்கடி நம்முடைய எண்ணங்களை சோதிக்கவேண்டும்.

ஆகையால் தான் நான் கூடுமான வரை வியக்தமாக சில விஷயங்களைத் தெளிவான வார்த்தைகளால் கூறியுள்ளேன். நான் கூறிய வற்றில் ஒருபாகம் முன்னர்க்கூறப்பட்டதாக விருக்கலாம். அதையே வெளிப்படையாகக் கூறுவதே என் எண்ணம். இவ்வியுத்தத்தில் தீர்மானமாகவேண்டியதென்று முன் கூறிய அம்சங்களை நான் நிச்சயிக்கவில்லை; வேறு ஒரு அரசாட்சியாரும் நிச்சயிக்கவில்லை யென்று முன்னமேயே சொன்னேன். ஆனல் என் மனக்கண்ணுக்கு எட்டியவரை தெளிவாக மேற்கூறிய கேள்விகளை விசதமாக வார்த்தைகளால் கூறி யுள்ளேன். வேண்டுமென்று செய்தால் ஒழிய ஒருவரும், மேற்கூறியபடி சுதஸ்வஸித்தமாக அமைந்த கேள்விகளை மறக்கமுடியாது. மேற்கூறிய கேள்விகளுக்குச் சரியான விடை யேற்படும் வரை நான் சண்டைபிடுவது என் கடமையாகும். இச்சண்டையின் உண்மையான நோக்கமானது எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாக யுத்தத்தில்சேர்ந்திருப்பவருக்குத் தென்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய மனவுறுதியும், தைரியமும், உறுதிப்படும்.

மேலும் இந்தக்கடும் போரில் இன்னொரு விசேஷம் என்னவெனில் ராஜதந்திரிகள் யுத்தத்தின் நோக்கம் என்ன வென்று தெளிவாக அறியக்காணோம். அநேகர் அந்நோக்க த்தைப்பலவாறாகக் கூறுகிறார்கள். ஒருதட்டவை கூறிய படி கூருமல் மாறி மாறிப்பேசுகிறார்கள். ஆனால் சாதாரண ஜனங்களுடைய மனதில் இவ்விஷயமாக யாதொரு ஐயப் பாடும் இல்லை. அந்நோக்கத்தை அவர்கள் தெளிவாகவும் வியக்தமாகவும் அறிந்துள்ளார்கள். ராஜதந்திரிகள் தான் ஜனங்களுக்கு வழிகாட்டிகள் என்பது இவ்விஷயத்தில் பொய்த்துவிட்டது. ஒருதேசத்தாரின் பிரயோஜனமானது பின்னுக்கப்பட்டு விட்டது. பொது ஜனப்பிரயோஜனமா னது முன் வைக்கப்பட்டு விட்டது.

ராஜதந்திரிகளின் தவறு.

ராஜதந்திரிகள் இப்போதும் கூட பலத்தை சம்பாதிக் கவும் தேசத்தை சேர்க்கவும் சண்டையிடுவதாக நினைக்கி ருர்கள். ஆனால் பொது ஜனங்களுடைய தீர்மானமானது இதனினும் யோக்கிய மாகவும் நேரானதாகவும் இருக்கி றது. ஆகையால் தான் இவ்வியுத்தமானது ராஜதந்திரிக ளிட்ட போரல்ல ஜனங்களின் போர் என்று கூறுகிறேன். ஜனங்களுடைய தெளிவான தீர்மானத்தை ராஜதந்திரிகள் பின் பற்றவேண்டும் அல்லது அவர்கள் தங்கள் வேலையை விட்டு நீங்கவேண்டும். ஆகையால் சாதாரண ஜனங்களுடை ய கூட்டங்கள் எந்நாட்டில் கூடினாலும் அவர்கள் ஒரேமுக மாகராஜதந்திரிகளை இந்த யுத்தத்தின் நோக்கமென்னவென் றும் இதன் முடிவாக எதைக்கொள்வதென்றும், அம்முடிவு எவ்விதமாக இருக்கவேண்டுமென்றுகருதுகிறீர்கள் என்றும், கூறும்படி வற்புறுத்துவது இதனால் தான். இதற்கு விடை யாக ராஜதந்திரிகள் தந்தது ஜனங்களுக்கு திருப்தியாக வில்லை. தேசத்தைச்சேர்க்கவும், பலத்தைப்பெருக்கவும் தா ன் இச்சண்டை மூண்டதென ராஜதந்திரிகள் எண்ணியிருக் கிறார்கள் என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். உலகத்தில்

நியாயம், தயை, ஜீவகாருண்யம், சமாதானம் நிகழ்வேண்டும். உலகத்தில் கஷ்டப்பட்டு அடிமை பூண்ட ஜனங்களை பந்தததிலிருந்து விடுவிக்கவும், பலவிதமான நிர்ப்பந்தங்களுக்குட்பட்ட ஸ்திரீபுமான்களை விடுவிக்கவும், தான் இப்போர் மூண்டதென்றும், இந்த மேலான காரணத்திற்காகத் தான் இவ்விதப்போரில் தலையிடுவது தகுதியென்றும் ஜனங்கள் எண்ணுகிறார்கள். இந்த தாராளமான எண்ணமும் அரிமா நோக்கமும் ராஜதந்திரிகளுக்கு ஏற்பட்டதாக ஜனங்களுக்குத் தெரியவில்லை. ராஜதந்திரிகள் உலகம் முழுவதையும், ஜனசமூகம் முழுவதையும் தழுவிய இப்பெரும் நோக்கைக் கைக்கொள்ளவில்லை போலும். ஜனங்களுடைய கேள்விகளை நன்ருக உணரவில்லை போலும். எவ்வித மறுமொழியை எதிர் பார்க்கிருர்கள் என்பதை தெரியவில்லை போலும். ஆகையால் தான் ஜனங்களுடைய கேள்விகளுக்கு நேரான மறுமொழி உரைக்கவில்லை போலும். யுத்தத்தில் நின்று யார் சண்டையோடுகிருர்களோ அவர்களுக்குத் தான் நாம் திருப்திகரமான மறுமொழி அளிக்கவேண்டும், அவர்களுக்கு திருப்திகரமான விடையைத் தருவதற்காகத்தான் நான் அடிக்கடி என்னுடைய எண்ணங்களை வெளியாக்குகிறேன். வியக்தமான மறுமொழியைப் பெற அவர்களுக்கு பாத்தியமுண்டு. நான் பேசும் வார்த்தையை அவர்கள் நேரில் அறிந்தால் சந்தேகமற என் வார்த்தைகளின் அர்த்தத்தை அறிவார்கள் அல்லது அவ்வார்த்தைகளை யாராவது மொழி பெயர்த்துத்தந்தால் அப்போதாவது அறிவார்கள் என்று எண்ணுகிறேன்.

நம்முடைய தேசக்கட்சியாருடைய தலைவர்களும் நான் சொன்னதை ஆக்ஷேபியா திருந்தால் தெளிவாக அம்மாதிரியே பேசுவார்களென்றும், ஒருவேளை இப்போரின் நோக்கமானது நான் கூறியபடி இல்லை யென்ருலும், இப்போரை முடிவுக்குகொண்டுவாம் மார்க்கம் இப்படி இல்லை யென்ருவது நினைத்தாலும், அப்போது தங்களுடைய எண்ணங்களைக் கூசாமல் வெளியிடுவர்கள் என்று எண்ணுகிறேன்

ஒற்றுமை.

யுத்தரங்கத்தில் எப்படி நேசகட்சியார் ஒற்றுமை யுற்றிருக்கின்றனரோ அங்ஙனமே, இவ்விஷயத்தில் ஒற்று மை வேண்டும். நோக்கத்திலும், ஆலோசனையிலும், ஒற்று மையிருந்தால் ஜயம் திண்ணம். இல்லையாகில் அது நிக ழாது.

"சமாதானத்துக்காக முயலுதல்" என்ற போலி முயற்சிகளை நிறுத்தவேண்டுமானால் ஜர்மானியருக்கு எதிர் கட்சியில் சேர்ந்திருக்கும் தேசத்தாருடைய ஜயமே இனி மேல் யுத்தம் நிகழாவண்ணம் இவ்வியுத்தம் முடிவுபெறும் என்ற நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டும். இந்த இந்த சமாதான நிபந்தனைகளுக்கு உடன் படுகிறோம். என்று அடிக்கடி ஜர்மானியர் வெளியிடுகிறார்கள். உலகம் வேண்டு வது சமாதான நிபந்தனைகள் அல்ல. ஆனால் நியாயமும் யோக்கியமான நடபடிக்கையும் தான்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

புத்தக விமரசம்.

எனது சாவகாசவேளை:— வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி—விலை அணு 2. 30 பக்கங்கொண்டது.

ஹிந்துக்களுக்குள் வழக்கிலிருக்கும் சில துர்வழக்கங்களை சம்பாஷணைகள் மூலமாகக் கடிந்து அவைகளின் தீமையை விலக்க முயலுகிறார். வரதக்ஷிணை வாங்குதல், மாமி மருமகளை வெறுப்பது, பெண்டிருக்கப் பெண்கொள்ளுதல், முதலிய தீயவழக்கங்களின் தீமைகளை அழகாக வெளிப்படுதத்தி யிருக்கிறார். நான்காவது ரூப கத்தில் யமதாமராஜன் நியாயஸதலத்தில் யமன் அடியிலகண்ட பாபிகளை தண்டிக்கும்படி உத்தர விடுவதாக சாதுர்யமாய்க்காட்டி யிருக்கிறார் (1) ராஜாங்கத்தில் பெரிய பதவியடைந்தும் தேசத்து ரோகியானவன். (2) பெண்டிருக்க பெண் கொண்டவன் (3) பெண் கொள்ளப்பணம் வாங்கினவன் (4) கன்றைக்கொன்று அதன் தோலுக்குள் வைக்கோலை அடைத்து அணைவைத்து பசுவின்பாலை க்கறந்து அதில் தண்ணீரைக்கலந்து விற்றவன் (5) நமது நடை யுடைகளை மாற்றி ஆங்கிலரைப்போல் நடப்பவன்.

34-வது அத்தியாயம்.

மானிடஜீவர்கள் பூலோகத்துக்குத் திரும்பிவரும் விதம்.

பூலோகத்தில் முந்தின ஜன்மங்களில் செய்த கர்ம பலன்களுடன் ஜீவன் கீழ்நோக்கித்திரும்புகிறான். அச்சமயத்தில் மேலே சொன்ன கர்மபலன்களின் பிரயோசனமாக அடுத்தஜன்மத்தில் இவனுக்கு நடக்கப்போகிற வர்த்தமானங்களெல்லாம் ஒரு படம்போலப்பரப்பி யிருப்பதை மின்வெளிச்சத்தில் பார்ப்பது போல ஒரு நிமிஷம் பார்க்கிறான். இந்தக்காரணத்தினாலேதான்நம்முடைய ஜீவதசையில் வரப்போகிற சில விஷயங்களை நாம் முன்னாலேயே நிச்சயமாயறிகிறோம். இன்னவிதமாய் அவைகள் வரப்போகின்றனவென்று நமக்கு ஞாபகமில்லாவிட்டாலும் அவைகள் வருமென்று ஒருவித அறிவுண்டாகிறது.

இது சம்பந்தமான ஒரு விஷயத்தை நாம் மறக்கக்கூடாது. அதாவது மனிதனுடைய இச்சாசக்தியின் திறமை இந்தசக்தியானது ஈசுவரனுடைய இச்சாசக்தியின் ஒருபாகமாகும். வரப்போகிற ஜன்மத்தில் சம்பவிக்கபோகிறதாய்க் காட்டப்பட்ட அனேக விஷயங்களை நம்முடைய இச்சாசக்தியால் வர வொட்டாமல் தடுக்கலாம். வருங்காலத்துக்கு எச்சரிக்கையாக நாம் கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மிகவும் நல்லது, ஏனெனில் கெடுதலான சம்பவங்களைத் தடுப்பதற்கு நமக்கு இலகுவாயிருக்கும். இது விஷயமாய் நீதியுள்ள ஒரு பழமொழி யிருக்கிறது. அதாவது—உனக்கு சாவுவரஹேது வில்லாமலிருக்கும் போது சாவைப்பற்றி மிகவும் பயப்படுகிறாய். அனேக ஜனங்கள் தங்களுக்கு ஒருபோதும் நேரக்கூடாத சங்கடங்களை எதிர்பார்த்துக்கொண்டு வெகு காலம் கவலையில் அழுந்தி யிருக்கிறார்கள்.

ஆனல் முன்சொன்ன மின் வெளிச்சத்தில் தான் கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமொருவன் செய்ய சாத்தியமில்லையென்று காணப்படுகிற விஷயங்களைக்கூட செய்து முடிக்கத் தீவிர முயற்சி செய்கிறான். எவ்விதத் தடைகளையும் மீறிவெற்றி யடைகிறான். ஏனெனில் பிரயாசைப்பட்டால் ஒரு காரியத்தை முடிக்கலாமென்று அவன் அறிகிறான். ஆகையால் முயற்சி செய்வதில் அவன் அதைரியப்படுகிறதில்லை.

பூலோகத்தில் சென்ற ஜன்மத்தின் கடைசியில் சில குணங்களையும் சக்திகளையும் ஜீவன் அடைகிறான். இந்த ஜன்மத்தில் அந்த குணங்களையும சக்திகளையும் பிரயோகிக்கவும் அம்மார்க்கத்தில் இன்னும் ஒருபடி மேற்போகவும் உதவக்கூடிய ஸ்தூலசரீரம் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது.

உதாரணமாக.—சென்ற ஜன்மத்தில் படிப்பில் நன்றாய் உழைத்த ஒரு வித்தியார்த்தி முன் சம்பாதித்த வித்தையை பரிணமிக்கச் செய்யத்தக்க சரீரத்தையும் அந்த வித்தையை உட்கொண்டு அதை இன்னும் அதிக மடங்கு விருத்திசெய்யத்தகுந்த மூளையையும் அடைகிறான். இந்த விதமாய் ஜன்மத்துக்கு ஜன்மம் அதிகமாய் மேலே சொன்ன குணங்களையும் சக்திகளையும் அபிவிருத்திசெய்து கொண்டுபோகிறான்.

கர்மதேவதைகள் இவனுக்குத்தகுந்த பெற்றோர்களைத் தெரிந்தெடுத்து அவனுடைய ஸ்தூலசரீரம் உண்டாக வேண்டிய அச்சை அமைக்கிறார்கள். இது அவர்களுடைய வேலை. ஏனெனில் ஒவ்வொரு ஜீவாத்மாவின் எண்ணம் வார்த்தை செய்கைகளை அவர்கள் கவனித்து அதற்கேற்ற சரீரத்தைக்கொடுக்கக்கூடிய பெற்றோர்களை ஏற்படுத்துகிறார்கள். கிறிஸ்துவ விவிலிய நூலில் செண்டு ஜான் என்பவர் த்ஞான திருஷ்டியால் நான்கு கர்மதேவதைகளைக் கண்டதாகச்சொல்லியிருக்கிறார். அவர்சொன்ன தொகை வெளிப்படையான அர்த்தத்துக்கு நான்கு தேவதைகளென்று காட்டினலும் எதார்த்தத்தில் ஜாஸ்தியான தொகைக்கு மறைபொருளாகச்சொல்லி யிருக்கிறார்.

ஜீவாத்மா கீழ்நோக்கிவரும்போது அதற்கு முந்தின ஜீவதசையில் அவனுக்குண்டான மானசீக சக்தியானது

பரிணமிக்க ஆரம்பிக்கிறது. அப்படி ஆரம்பிக்கும்போது அவனுடைய எண்ணங்களுக்கு அனுகுணமான மானசப்பிரகிருதியைத் தன்னைச்சுற்றிலும் இழுத்துக்கொள்ளுகிறான். அதாவது! அவனுடைய எண்ணங்கள் வாசம் செய்யவும் ஒன்றைக்கொண்டு நினைக்கவும் ஒரு பொருள்வேண்டுமல்லவா? அதுதான் மானசீக திரவியம், அதுவே அவனுக்கு நூதன மானச சரீரமாகிறது.

அவன் புவர்லோகத்துக்குத் திரும்பிவரும்போது அவனுடைய மனத்துடிப்புகளும் இச்சைகளும் மன எழுச்சிகளும் பரிணமிக்க வாரம்பிக்கின்றன. அவைகளுக்குப் பொருத்தமான புவர்லோக திரவியத்தைத் தங்களைச் சுற்றி இழுக்கின்றன. இவ்விதமாய் நூதன இச்சாசரீரம் உண்டாகிறது.

அவன் புவர்லோகத்தை விட்டுமேலே போகும்போது ஜயிக்கப்படாத அல்லது க்ஷீணித்துப் போகாத அவனுடைய ஆசாபாசங்களை அந்த லோகத்திலேயே விட்டுப் போயிருந்தான். திரும்பி அங்கே வரும்போது அவைகளை ஸ்வீகரித்துக் கொள்ளுகிறான். அவைகள் அவனைச்சேர்ந்தவை இயற்கையாய் அவனிடம்போய்ச் சேருகின்றன. அவைகள் இவனுடன் ஸ்வர்க்கத்துக்குப் போகமாட்டா. ஏனெனில் அவைகள் அசுத்தமானவை.

இப்போது அவன் மானச சரீரத்தாலும் இச்சா சரீரத்தாலும் போர்த்தப்பட்டவனாய் அவனுடைய ஸ்தூல சரீரம் தயாராவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறான். ஒரு சிறிய மானிட சிசுவாக ஆகும்வரை அந்த சரீரத்தையும் அதன் உற்பத்திக்கு ஆதாரமான தாயார் தகப்பனையும் கவனித்துக்கொண்டு வருகிறான். அந்த நூதன சரீரத்தின் மூலமாய் முன் ஜன்மங்களின் அனுபோகங்களை வெளிப்படுத்த வேண்டியவனாயிருக்கிறான். அது நல்ல சரீரமாயிருந்தால் முந்தின பாடங்களை சீக்கிரம் கற்றுக்கொள்ளும். அப்படி இல்லாவிட்டால் இவனுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கும். ஆகையால் நல்ல சரீரத்தை யடைவதற்காக இந்த ஜன்மத்திலேயே அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

வி. வெங்கூசாமி ஐயர்.

சமாசாரம்,

காளிது அக்டோபர் மாதம் 19, 20-ம் தேதிகளில் பாண்டிய நாட்டின் பிரம்ஹக்ஞான கான்பரன்ஸ் மகாநாடு மதுரை ஜில்லா பழனியில் நடந்தது.

உள்ளூர் பிரஹ்மக்ஞானசபைக் கிளைச்சங்க அங்கத்தினர்களும் வெளியூர் பிரதிநிதிகளும், உள்ளூர் நகரவாசிகளுமாக 150 பேர் வரை மலையடிவாரத்திலிருக்கும் சுப்பிரமணியஸ்வாமி கோவில் உள் மண்டபத்தில் 19ம் தேதி மாலை 4-மணிக்குக் கூடினார்கள். மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி இந்த ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகளும், அனுதாபர்களும் வந்திருந்தார்கள். பொதுவாக பல இடங்களில், காய்ச்சலால் ஜனங்கள் தற்காலத்தில் பீடிக்கப்பட்டு வருவதால் அனேக இடங்களிலிருந்து பிரதிநிதிகள் எதிர்பார்த்தபடி வரவில்லை. பழனி ஸ்ரீ தண்டபாணி தேசீய வித்தியாசாலை உபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ ராமசுப்பையர் அவர்களும் ஷை பள்ளிக்கூட மாணாக்கர்களில் சிலருமாக கடவுள் வாழ்த்துப்பாட மகாசபை ஆரம்பமாயிற்று. இரண்டு மகமதியப்பையன்கள் இந்துஸ்தானியில் கடவுளை ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்பால் வரவேற்கும் கமிட்டி அக்கிராசனாதிபதி பிரஹ்மஸ்ரீ ஆத்மநாதையர் அவர்கள் வந்தவர்களுக்கு நல் வரவு கூறினார். பழனி முனிசிபல் ஆபீஸ் மானேஜர் பிரஹ்மஸ்ரீ ஸ்ரீனிவாசையர் அவர்கள் பிரேரபணை செய்ய பிரஹ்மஸ்ரீ என். ராமசாமி ஐயர் அவர்கள் அதை ஆமோதிக்க, மற்ற கனவான்களும் அதை ஆதரிக்க பென்ஷன் தாசில்தார் பிரஹ்மஸ்ரீ கே. எஸ். ராமச்சந்திரையர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அவர் பொதுவாக பிரமஹக்ஞானசபை, சுதேசக்கல்வி இவைகளைப் பற்றியும் மகாநாடு பழனியில் கூடுவதற்கான காரணத்தையும் சுருக்கமாக எடுத்துக்கூறினார். அப்பால் பழனி மலையில் வீற்றிருக்கும் ஸ்ரீ தண்டாயுதபாணி மூர்த்தியின் பரமார்த்தத்தைப் பற்றிச் சுருக்கமாயும் நிரம்ப சொற்சாதுர்யத்துடனும் ஆத்தங்குடித் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ சுப்பாராமையர் அவர்

களும் ஹைகோர்ட்டு வக்கீல் பிரஹ்மஸ்ரீ கல்கத்தா வி. ராமசந்திரையர் அவர்களும் எடுத்துரைத்தார்கள். பழனிவாசியான ஒரு முசல்மான் மகா-ா-ா-ஸ்ரீ பார்ஸ் லப்பை அவர்கள் ஸமரஸமதத்தைப்பற்றித் தெளிவாகவும் உபமானத்துடனும் தெரிவித்தார். பிரஹ்மக்ஞான சபையின் நோக்கங்களைப்பற்றியும் அது செய்துவரும் வேலைகளைப்பற்றியும் கடம்பூர் பிரஹ்மஸ்ரீ பஞ்சாபகேசையர் அவர்களும் பிரஹ்மஸ்ரீ ராமசுப்பையர் அவர்களும் பேசினார்கள். அன்று மாலை $6\frac{1}{2}$-மணிக்கு சபை கலைந்தது. இரவு ஷை மண்டபத்தில் வக்கீல் பிரஹ்மஸ்ரீ எம். எஸ். ராமசாமி ஐயர் அவர்கள் சீதாகல்யாணம் என்ற ஹரி கதையைஎல்லோரும் கேட்டு ஆனந்திக்கும்படியாகவும் உபமானங்களுடன் வெகு அழகாயும் செய்தார்கள். இரவு $9\frac{1}{2}$-மணி முதல் 1-மணி வரை கதை நடந்தது.

மறுதினம் காலை $8\frac{1}{2}$-மணிக்கு பிரஹ்மஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் அவர்கள் ஸர்வேசுவரனைப் பிரார்த்தித்து சுலோகங்கள் சொல்ல மதுரை மீனாக்ஷி வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயரும் வாலிப சாரணர்களின் சங்கத்தின் தலைவருமான பிரஹ்மஸ்ரீ பி. ஏ. சுப்பிரமணியையர் அவர்க ் ஷை சங்கத்தின் உயர்வான நோக்கங்களைப் பற்றியும் அதன் அங்கத்தினர்கள் எவ்விதம் பரோபகார சிந்தையுள்ள நகரவாசிகளாக ஆகக்கூடும் என்றும், சுருக்கமாகவும் தெளிவாயும் தெரிவித்தார். இச்சங்கத்தின் அங்கத்தினர்களில் இருவர்கள் ஆபத்துக்காலத்தில் பிறருக்கு உதவி செய்வதற்காக தாங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களில் சிலவற்றை பிரத்தியக்ஷ திருஷ்டாந்த மூலமாக எடுத்துக்காட்டினார்கள். மதுரையில் ஷை சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் ஒரு இடத்தில் நெருப்பு பிடித்ததாகத் தெரிந்து அது விஷயமாக உதவி செய்ய எடுத்துக்கொண்ட முயற்சியைப்பற்றி தான் நேரில்கண்டதை பிரஹ்மஸ்ரீ என். ராமசாமி ஐயர் அவர்கள் எடுத்துரைத்தார். பழனி

தண்டபாணி தேசீயவித்தியாசாலை தலைமை உபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ கே. ஜி. சிவஸ்வாமி ஐயர் அவர்கள் ஷை பள்ளிக்கூடம் நடைபெறும் தன்மையைப் பற்றி சில விபரம் தெரிவித்தார்கள். ஷை பள்ளிக்கூடம் ஏற்படுத்தியவர்களின் நோக்கங்கள் மிகவும் உயர்வானவைகளாய் இருப்பதினால், அதில் படித்த பையன்கள் நல்ல நகரவாசிகளாய் ஆவார்கள் என்பதில் யாதொரு சந்தேகத்திற்கிடமில்லை யாதலால் பரோபகாரமும் தேசாபிமானமும் உள்ள கனவான்கள் ஷை கல்விச்சாலைக்குப் பொருளுதவி செய்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். அவ்விதம் ஸ்ரீ தண்டாயுதபாணி மூர்த்தி கிருபை செய்வாராக! அப்பால் பிர்ஹ்மஸ்ரீ பஞ்சாபகேசையர் அவர்களும் பிரஹ்மஸ்ரீ எம். எஸ். ராமசாமி ஐயர் அவர்களும் சுதேசக் கல்வி அத்யாவசியமென்று பேசினார்கள். ஆத்தங்குடி பிரஹ்மஸ்ரீ சுப்பராமையர் அவர்கள் பிரஹ்லாதனுடைய வரலாற்றைப்பற்றி அங்குக் கூடியிருந்தவர்களின் ஹிருதயத்தில் தெய்வபக்தி பரோபகார சிந்தை உண்டாகும்படியாக வெகு உருக்கத்துடன் கூறினார்கள். அப்பால் அக்கிராசனாதிபதி அவர்கள் அவரவர் செய்யும் எக்காரியத்தையும் பலாபேக்ஷை இன்றி ஈசுவர கைங்கர்யமாகப் பாவித்து செய்துவருவாராகில் இஹத்திலும் பரத்திலும் சுகம் பெறலாமென்று முடிவுரை கூறினார்.

19, 20-ம் தேதிகளில் நடந்த மகா நாட்டிற்கு வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கு பரோபகார சிந்தையுள்ள ஸ்ரீமான் வி. சி. த. ராம. சிதம்பரம் செட்டியார் அவர்களின் ஏற்பாட்டில் அன்னமளிக்கப்பட்டது. ஸ்ரீமான் என். ராமசாமி ஐயர் அவர்கள் கடைசியாக வரவேற்கும் கமிட்டி மெம்பர்களுக்கும் மகாநாட்டு அக்கிராசனாதிபதி அவர்களுக்கும் மகாநாடு கூட இடம் கொடுத்த தேவஸ்தான அதிகாரிகளுக்கும் ஷை செட்டியார் அவர்களுக்கும் வந்தனம் கூறினர்.

சாரணசங்க அங்கத்தினர்கள் தேச வாழ்த்தும் ராஜவாழ்த்தும் பாடினார்கள். பகல் 12-மணிக்கு மகாநாடு முடிவு பெற்றது.

ஓம் தத் ஸத்.

நாளிது அக்டோபர் மாதம் Iவ செவ்வாய்க்கிழமை தினம் மாதுஸ்ரீ அன்னிபெசண்டு அம்மையார் அவர்களின் 71-வது பிறந்த நாள் இந்நகரம் சேதுபதிஹைஸ்கூல் கட்டிடத்தில் கொண்டாடப் பட்டது.

மகா-௱-௱-ஸ்ரீ அ. ரெங்கசாமி ஐயர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

பாய் ஸ்கௌட் சங்கத்தைச்சேர்ந்த வாலிபர்கள் நமது இந்திய மாதாவின் வாழ்த்துப் பாடினார்கள்.

மீனாக்ஷிவித்தியாசாலை மாணவிகளில் இருவர் அம்மை அவர்களின் குணாதிசயங்களைப்பற்றி இரண்டுபாடல்களைப் பாடினார்கள்.

அம்மையவர்களுடைய படம் பஹிரங்கமான இடத்தில் வைக்கப்பட்டது.

அக்கிராசனாதிபதிபதி அவர்கள், அம்மையவர்கள் உறுதியான கர்மயோகி என்றும், எப்பொழுதும் பிறர் நலத்தைக் கோரி உழைப்பவரென்றும், அவர்களுடைய குணாதிசயங்களில் சிலவற்றைப் பற்றி முகவுரை கூற,

மகா-௱-௱-ஸ்ரீ வி. இராமச்சந்திரையர் அவர்கள்

" எம். எஸ். இராமசாமி ஐயர் அவர்கள் பி.ஏ. பி.எல். எல்.டி.

" சிவகங்கை எ. ஆர். ரெங்கசாமி ஐயர் அவர்கள்

மகா-௱-௱-ஸ்ரீ என். எஸ். விஸ்வநாதையர் அவர்கள் பி. ஏ. பி. எல்,

" எம். எஸ். சுந்தரசர்மா அவர்கள் பி. ஏ.

இவர்கள் ஒவ்வொருவரும் ஷை அம்மையவர்களின் குணங்கள் நடபடிக்கை இவைகளில் சிலவற்றைப்பற்றித் தெளிவாய் எடுத்து உரைத்தனர்கள்.

அக்கிராசனாதிபதியவர்கள், ஒவ்வொருவரும் அம்மையவர்களின் நடத்தையைப் பின்பற்றி நடப்பது நலமென்று முடிவுரை கூறினர்.

மகா-௱-௱-ஸ்ரீ வி. இராமச்சந்திரையர் அவர்கள் வந்திருந்தவர்களுக்கும் ஷை கூட்டம் இக்கட்டிடத்தில் கூடுவதற்கு அனுமதி கொடுத்த மதுரைக்காலேஜ் போர்டு அவர்களுக்கும் பள்ளிக்கூடம் தலைமை உபாத்தியாயர் அவர்களுக்கும் வந்தனம் அளித்தார்கள்.

அம்மையவர்களுக்கு வாழ்த்துக்கூறி தந்திஅனுப்பபட்டது சங்கத்தினர்கள் ராஜவாழ்த்துப்பாடிய பிறகு கூட்டம் கலைந்தது.

ஓம் தத் ஸத்.

புத்தக விமர்சம்.

சந்தோபதேச மஞ்சரி:—[வி. செ. ஆறுமுகமுதலியாரால் பல நூல்களினின்றும் ஆராய்ந்து சேர்க்கப்பட்டது. 184 பக்கங்கொண்டது. அழகியபடங்களுடன் சேர்ந்தது. விலை 1—4—0 மூன்றாம் பதிப்பு.] சைவ வைணவ குரவர்களின் பிரசுரங்களினின்று ஆராய்ந்தெடுத்துத்தொகுத்த தொகுதியிது. சம்சாரசாகரத்தின் அலைகளால்மோதப்பட்டு கற்களின்மேல் தள்ளப்பட்டு உடம்பெல்லாம் காயப்பட்டு மனமிடிந்து, வாடும் மானிடர்களுக்கு தமிழ்மொழியில் அமுதம்போல் இனிமையாயும் அருமருந்தைப்போல் ஆறுதல் செய்யத்தகுந்ததுமான ஔடதம் யாதெனில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள், இவர்களது தீம்பாசுரங்களே. நல்லதாளில் அனேகமாய் அச்சுப்பிழையின்றி அழகாக அச்சிட்டு உலகத்தாருக்குக் கொடுத்திருப்பதால் முதலியாரவர்கள் நல்ல தொண்டு செய்தவாராகிறார். எமக்கு ஒரு பிரதி யனுப்பியதற்காக எம்முடைய நன்றியறிதலைத்தெரிவிக்கிறோம். மூன்று பதிப்புகள் இதுவரை வெளிவந்திருப்பது உலகத்தார் இதனை ஆதரிக்கிறார்கள் என்பதைவெளியிடுகிறது. விஷய அட்டவணை யில்லாதது இவ்வரும் புத்தகத்திற்கு ஒரு ஊனம். அதை அடுத்தபதிப்பில் நீக்குவாராக. நாலாயிர திவ்யபிரபந்தம் முதலிய சில வைணவப்பாசுரங்களும் இதனுள் தொடுக்கப்பட்டிருப்பினும், இன்னும் அநேகம் வைணவப்பாசுரங்களைத் தொகுக்கின் இவ்வழகிய தொகுதியின் பெருமையும் உபயோகமும் விரியும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமதி அன்னவஸந்தி சங்கம்:— 20-வது வருட அறிக்கை. 1898 ஆம் ஞு ஜனவரி மீ த்தில் பங்களூரில் ஸ்தாபிக்கப்பற்ற இச்சங்கத்தின் 20வதுவருட அறிக்கையைப் பார்வையிட்டோம் (1) இந்துமத நூல்களின் சாராம்சங்களைக் கற்பித்தல், தென்னாட்டுக்குத் தாய் பாஷையாகிய தமிழ் கற்றலும, அதன்படி ஒழுகலும் (2) புலவர்களைக் கொண்டு அரிய ஞானவிஷயங்களை யனுசரித்துப் பிரசங்கங்கள் செய்வித்தலும் (3) (a) ஜீவனம் செய்யத்திறனற்ற எல்லா வர்ணத்து ஏழைகட்கும், ஞானிகட்கும் அன்னதானம் வஸ்திரதானம், செய்யவும், மற்றும் (b) கனவான்களின் விடுதிகளில் நடத்தவேண்டிய தருமங்களைப்பொருள் கொடுத்து சங்கத்தில் நடத்தும்படி விரும்புவார்களானால் சங்கத்தார் அஃது நடந்த உடன் படுதலும். (4) சங்கத்து ஆலோசனை சபையார் அப்போதைக்கப்போது ஆக்ஞை செய்யும் இதரவித நியாயமான தர்மங்கள் செய்தலும் இச்சங்கத்துக் கருத்துகளாகும்.

இந்து மதத்தை மலினமாகக் கிடந்த ஸ்திதியிலிருந்து உயர்ந்த ஸ்திதிக்குக் கொண்டுவரப் பெருமுயற்சி யெடுத்தவருள் முதன்மையான ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாள் பெயரால் இச்சபையழைக்கப்பெறுவது, இச்சபையாரின் செய்ந்நன்றியறிவையும்பான்மையையும் நன்கு விளக்குகின்றது. மேற்கூறிய ஒவ்வொரு நோக்கமும் நன்குநடைபெற்றதாகவும், ஏழைகளுக்கு தினந்தோறும் இருவருக்கும் விசேஷ தினங்களில் ஐம்பதின்மருக்கும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் இவர்கள் திருநக்ஷத்திர தினங்களில் சுமார் இருநூற்று வருக்கும் அன்னமிடப்பட்டதாகவும் அறியச்சந்தோஷ மடைந்தோம். இச்சபைக்கு வேண்டிய வசதிகளுடன் 7,000 ரூ க்கு மேற் கொண்ட ஒரு கட்டிடம் வாய்த்திருப்பதும் மிகவும் ஆனந்த கரமான விஷயம். இச்சங்கமும் இச்சங்கம் கொண்ட நோக்கங்களும், என்றும் குன்றாமல் மேல்மேல் அபிவிருத்தி யடைந்து வருமாறு எல்லாம் வல்ல முழு முதற் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னதான பலனும் தத்வபரிசோதனையும்:— ஸ்ரீபரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் இயற்றியது. அணா 4. அன்னதானத்தைப் புகழ்ந்து அதன் மேலான பலனைக் கதைமூலமாக வெளியிடுகிறது. இதற்கு அனுபந்தமாக சிஷனுக்கு குரு அக்ஞானம் என்பது என்ன, ஞானம் என்றால் என்ன, ஞானத்தை எப்படி அடைவது, என்ற பல விஷயங்களையும் நன்றாக விளக்கியுள்ளார். ஸமஸ்கிருத பதங்களை தமிழில் அச்சிடுவதில் அநேகம் பிழைகள், காணப்படுகின்றன. தமிழில் உள்ள ‘ச’ என்ற அக்ஷரத்துக்கு மாறாக ஸம்ஸ்கிருதத்தில் ச, ஷ, ஸ, என்ற மூன்றும், ச, வரிசையில் 4 அக்ஷரங்களும் இருக்கின்றன. தமிழ், அக்ஷரத்தை உபயோகித்தால் யாதொரு பிசகும் இல்லை. ஆனால் ‘ஸ’ அல்லது ‘ஷ’ உபயோகிக்கவேண்டிய இடத்தில் ‘ஸ’வை உபயோகித்தால், ஸமஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கு அதைப்படிக்கும்போது மிகுந்த வருத்தம் உண்டாகிறது. ஸம்ஸ்கிருதம் தெரியால் ‘ஸ’ வின் உச்சரிப்பை மட்டும் தெரிந்தவாகள் சப்தத்தைத்தப்பிதமாக உச்சரிக்கக்கற்றுக் கொள்ளுகிறார்கள். அறிந்தவர்கள் தப்பித உச்சரிப்பையே ஒரு யாபமாகக்கூறுகிறார்கள். இப்போது அச்சிடப்படும் அநேக புஸ்தகங்களில் இவ்விதப் பிழையானது அடிக்கடி காணப்படுகின்றது. இது பெரிய தப்பிதமாகின்றது. இப்புத்தகமோ மிகவும் மேலான உண்மைகளை நன்றாக உணர்த்துகின்றது. அப்படியிருக்க இவ்விதப் பிழைகள் இல்லாமலிருந்தால் இன்னும் சிலாக்கிய மாயிருக்கும் என்று உன்னியே இதைப்பற்றி இங்குவிவரித்திருக்கிறோம்.

தற்கால நிலைமை.

(136-ம் பக்கம் பார்க்க.)

உருத்திரமூர்த்தியின் டமரு சப்தமானது உலகத்தில் கேட்கின்றது. அச்சப்தத்தின் அதிர்ச்சியினால் லக்ஷக்கணக்கான மனிதர்கள் யுத்தத்தில் மாண்டார்கள். இப்போது ஜனசமூகங்களின் ஆட்சி முறைகள் சிதைவுறுகின்றன. ஒரு வருஷத்திற்கு முன் ருஷியாவில் ராஜாங்கம் போய் ஜனங்களுக்குள் பல கக்ஷிகள் ஏற்பட்டு இன்னும் ஒரு விதமான ஸ்திரமான ஏற்பாடு உண்டாகாமலிருக்கிறது. ஆஸ்த்திரியா ஹங்கேரியில் பற்பல பிளவுகள் ஏற்பட்டு விட்டன. 10 அல்லது 12 பிறிவுகள் ஏற்பட்டு ஒவ்வொரு பிறிவும் துண்டு துண்டாக இருக்கவேண்டுமென்ற அவாவுடன் பிரஸிடெண்டு வில்ஸனுக்குத் தங்களை தனித்து ஆட்சியாய்ப் பாவிக்கவேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்திரியா அரசர் நவம்பர்மீ 2உ யன்று தான் ராஜீனமா செய்து விட்டு ஸ்விட்ஜர் லாண்டு என்ற யுத்தத்தில் சம்மந்தப்படாத தேசத்துக்கு தன் நகைகளுடனும் சாமான்களுடனும் போய்விட்டார். ஜர்மனியின் மாறுதல்களிலும் டமருவின் பலனைக்காண்கிறோம்.

***

ஆனால் உருத்திரனுடைய வேலையானது பிரஹ்மாவின் வேலைக்கு உதவியேயொழிய வேறில்லை. பிரஹ்மாவின் வேலையும் நடந்துவருகிறது. இங்லாந்தில் ஜனநாயகத்தை விருத்தி செய்யவும் ஜனங்களுடைய உரிமைகளை அதிகமாக்கவும் உண்டு பண்ணப்பட்ட சட்டங்களும், ஸ்திரீகளுக்கு 'வோட்' செய்ய அதிகாரம் கொடுத்த சட்டங்களும் இனிக் கல்வி கற்பித்தல் முதலிய விஷயமாய் நடந்து வருகிற சீர்திருத்தங்களும், பிரஹ்மாவின் வேலைகள். ஜர்மனியில் நடந்த சீர்திருத்தங்களும் அவர் செயலே. இந்தியாவில் ஏற்படப்போகிற சீர்திருத்தங்களும் அவர் செயலே. லோகக்ஷேமத்திற்காக அவரது வேலைகள் சீக்கிரம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இறைவனை யேற்றுவோமாக.

கிழக்கரங்கத்தில் சண்டை நின்று விட்டது. பல்கேரி யாவானது சரணாகதி பண்ணிவிட்டது. துருக்கி நேசக் கட்சியாருடன் இணங்கி விட்டது. இடாலிக்கும் ஆஸ்திரி யாவுக்கும் சண்டை நின்றுவிட்டது. ஆஸ்திரியா யுத்தக் கப்பல்கள் சரணடைந்து விட்டன. எல்லாம் மங்களகரமாய் முடிந்து விட்டன.

***

சமாதானமானது நிகழவேண்டியதுதான் இனி நடக் கவேண்டியது. பிரஸிடெண்டு வில்ஸன் சொன்ன வார்த் தைகளை இப்போது யாவரும் அங்கீகரித்து விட்டார்கள். ஆனால் அது வாசா கூறப்பட்ட நியாயமா அல்லது காரி யத்தில் நடக்கப்போவதா? ஜயத்தினால் இறுமாப்படை ந்து நியாயத்தை வார்த்தையால் போற்றி காரியத்தில் தவற விடுவார்களா? உலகத்திலுள்ள சகல ஜனங்களுடைய க்ஷேமத்துக்காக இடப்பட்டபோரின் பிரயோஜனத்தை எல்லோரும் அடைவார்களா அல்லது சில ஜாதியார் மட்டும் அடைவார்களா? ஸர்வ நியந்தாவான ஈசுவரனால் இடப்பட் ட இப்போரில் கருவிகளான ஜனங்கள் ஈசுவரனை மீறமுடி யுமா? ஈசுவரனுடை பிரதிநிதி போல் விளங்கும் பிரஸிடெ ண்டு வில்ஸன் வார்த்தை பொய்த்துப்போகாமல் நியாயம் பி றக்குமா? பல வருஷங்களாக கிருஷி செய்து பலனுக்கு வரு ங்காலத்தில் மனிதர்களுடைய அகங்காரமமகாரங்களால் சி ந்திய இரத்தமும், இட்ட செலவும் வீணாகாமல் பகவா ன் காப்பாற்றுவாராக. நேசக்கக்ஷியாரின் மந்திரிகளையும், ஜர்மன் மந்திரிகளையும் நேர்மையும் ஒழுங்குமான வழிகளில் செல்லும்படி ஈசுவரனும் அவன் சேவகர்களும் நடத்துவார் களாக. சமாதான சபையில் உலகக்ஷேமகாரணமாக தீர்மா மானங்களே நிகழும்படி எல்லாம் வல்ல ஈசுவரன் அருள் புரிவாராக. நேசக்கக்ஷியாருடைய நிபந்தனைகளுக்கு ஜர்மானியர் இணங்கி விட்டதாயும், சண்டை நின்று விட்டதாயும் அறிய நாம் சந்தோஷிக்கிறோம். உல கமே சந்தோஷிக்கிறது. ஜர்மன் அரசர் ராஜீனமா செய்து விட்டாராம். ஜர்மனியில் ஜனக்குழப்பம் அதிகரிக்கிறதாம். ஜர்மனிக்குள் இருக்கும் பவேரியாவின் குறு நில மன்னரை ஜனங்கள் பட்டத்திலிருந்து தள்ளி ஜனசபையார் தாங் களே ஆட்சியைக்கைக்கொண்டனராம். அடுத்தமாத சஞ் சிகை வருமுன் இன்னும் எத்தனை மாறுதல்களை கேட் போமோ அறியோம்.

ஆர் ரங்கஸ்வாமி ஐயர்

ரிஷிகளின் உபதேசம்.

(128-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

2. இரண்டாவது உபதேசத்தைப் பிராஹ்மணர்களிடத்துப் பலவிதமாயுள்ள கர்மப்பிரயோகங்களின் மூலமாய் போதிக்கிறார்கள். நித்திரையை விட்டெழுந்தது முதல் மனிதனுயுள்ளவன் செய்யவேண்டிய கர்மங்களையும் அதன் மூலமாய் ஒவ்வொருவரும் பரிசுத்தர்களாகக் கூடிய மார்க்கத்தையும் போதித்திருக்கிறார்கள். விடியற்காலம் நித்திரையை விட்டெழுந்தவுடனே

ब्रह्मा मुरारि स्त्रिपुरान्तकश्च भानुः शशी भूमि सुतो बुधश्च।
गुरुश्च शुक्रश्च शनि राहु केतवः कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥

இவ்விதம் பிரதிதினமும் திரிமூர்த்திகளையும், நவக்கிரஹங்களையும் தியானித்துப் பரிசுத்தர்களாக வேண்டும்

மேலும். ஒவ்வொருவரும் பரிபூரணரும் பகவத் ஸ்வரூபருமான குருதேவனைத் தியானிக்க வேண்டுமென்பதாகப் போதித்தார்கள்.

नमोऽस्तु गुरवे तस्मै इष्टदेवस्वरूपिणे ।
यस्य वाक्यामृतं हन्ति संसाराख्यमहामयम् ॥

யாருடைய அமிர்தவாக்குகளைக் கேட்பதால் அஞ்ஞானமென்ற விஷம் நசிக்குமோ அவ்வித இஷ்டதேவ ஸ்வரூபமான குருதேவனுக்கு நமஸ்காரம்.

எல்லாக் கர்மங்களையும் போதித்து எங்தெந்தக் கர்மங்களை எவ்விதம் செய்யவேண்டும், ஹோமவேதிகள் எப்படியிருக்கவேண்டும், எத்தனை செங்கல்களை எவ்விதம் அடுக்கவேண்டும், என்னென்ன பதார்த்தங்களை எவ்விதம் ஹோமம் செய்யவேண்டும் என்ற இந்த விஷயங்களைத் தெளிவாகப் போதித்து, எல்லாக்கர்மங்களுக்கும் முக்கிய சுத்தம் சித்த சுத்திசெய்து கொண்டு பரிசுத்தர்களா

வதே என்பதாகவும் போதித்தார்கள். செய்யும் கார்யங்களெல்லாம் பரிசுத்த முள்ளவைகளாயாதல் வேண்டும். ஒவ்வொருவனும் தனக்குத்தானே புரோஹிதனாக இருந்து கர்மங்களை ஸ்வதந்தரமாகச் செய்து, மந்திரங்களை யுச்சரிப்பதின் துவாரா எல்லாவற்றையும் பரிசுத்தமாகச் செய்வதே கர்மங்களின் முக்கிய உத்தேசம். இவ்விதம் உபநயனம் முதல் ஸன்யாசியாகும் காலம் வரைக்கும் கர்மங்களின் துவாரா தான் பரிசுத்தனாகித் தான் செய்யும் ஸகல லௌகிகவைதிக காரியங்களையும் பரிசுத்தங்களாகச் செய்யவேண்டுமென்பதாகப் போதித்து, உபாஸனா மார்க்கத்தையும் கூடத்தெரிவித்து, ஜீவனுக்கும் ஈசுவர தத்துவத்திற்கும் உள்ள ஐக்கிய பாவத்தையும் போதித்து அனுஸந்தானம் செய்யவேண்டு மென்பதாக அவர்கள் போதித்தார்கள். "ஸோஹம்" "ஸச்சிதாநந்தோஹம்" என்ற வாக்கியங்களை மனனம் செய்து அனுஸந்தானம் செய்யவேண்டுமென்பதாகப் போதித்தார்கள்.

3. யக்ஞயம் மூன்றாவது உபதேசமாகும். முதல்முதல் பிரஜாபதியும் தேவர்களுமிருந்தார்கள். இதர பூதங்களும் மானிடர்களும் அப்பொழுதில்லை. மானிடர்களும் அவர்களைப்போலொத்தவர்களும், உற்பத்தியாகி, அபிவிருத்தியாகி பகவத் ஸ்வரூபர்களாக வேண்டு மென்ற உத்தேசத்தோடு பிரஜாபதி தானகட்டுப்பட்டவரானாரென்பதாகவும் தேவர்கள் அந்த சரீரத்தைச் சேதித்து யக்ஞம் செய்தார்களென்பதாகவும் யக்ஞத்தினின்று மானிடர்களும், இதர பூத கோடிகளும், மலைகள், நதிகள், முதலியவைகளும் உற்பத்தியாயின என்பதாகவும், புராணங்களில் கதைகளை நீங்கள் வாசித்திருப்பீர்கள். அக்கதைகளினின்று நாம் தெரிந்து கொள்ளும விஷயமென்ன? பிரஜாபதி தனக்குத்தானே மனப்பூர்வமாய்க் கட்டுப்பட்டவராகி, யக்ஞபசுவையும் அதற்குச்சம்பந்தபட்டவைகளையும்உற்பத்திசெய்தார். நாம் யக்ஞங்களை செய்வதின் துவாரா ஸர்வபூதங்களின் ஐக்கியத்தையும் ஸ்வானுபவத்திற்குக் கொண்டுவரவேண்

டும். பிரதிதினமும் பஞ்சமஹாயக்ஞங்கள் செய்வதின் மூலம் நமக்கும் ஸகல பூதங்களுக்குமுள்ள பாஸ்பரஸ்ஞது பந்தத்தைப் பாவித்து ஸர்வபூத ஸமத்வத்தையும் ஸர்வபூத ஐக்கியத்தையும் தெரிந்து கொண்டு ஐக்கியபாவத்தை விருத்திசெய்து கொள்ளவேண்டும். தேவர்கள், ரிஷிகள், மானிடர்கள், பிதுருக்கள், ஸமஸ்த பூதங்கள் எல்லோரும் கலந்து ஒரு சரீரத்தினின்று உற்பத்தியானவர்களானபடியால் எல்லாம் ஒரே தத்துவமென்பதாக போதிப்பதற்கே பஞ்சமஹா யக்ஞங்கள் நிரூபிக்கப்பட்டன வென்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டுமென்பது ரிஷிகளின் உபதேசம்.

4. மேற்காட்டிய விஷயங்களை எல்லோருக்கும் சமானமாகப் போதித்துக்கொண்டிருந்தார்கள். இனி சொல்லப்போகும் விஷயம் கிரஹஸ்த தர்மத்தை ஒழுங்காய் நடத்தி பஞ்சமஹாயக்ஞாதி கருமங்களைச் சிரத்தையோடு செய்து ஸ்வார்த்தத் தியாகத்தை அனுஷ்டித்துப் பரிசுத்தராகி வானப்பிரஸ்தாசிரமத்தைப் பிரவேசிக்கும் மனிதனுக்குப் போதிக்கப்படும். அவ்விதஸ்திதியில் பாஹ்ய கர்மங்களைவிட மானஸீகமாகக் கர்மங்களைச் செய்து கொண்டு கர்மங்களின் அந்தரார்த்தங்களையும் பிரயோஜனங்களையும் மனனஞ்செய்து கொண்டு மானிடர்கள் எல்லோருடைய மனோபாவங்களை அறிந்து அவர்களுடன் ஐக்கியபாவத்தை அப்பியசிப்பான். அவ்வித ஜீவனுக்கு பரம ரஹஸியம் போதிக்கப்படும். அந்த ரஹஸிய மென்னவெனில் பரதத்துவத்தை அபரோக்ஷமாக ஸ்வானுபவத்தில் அறியும் மார்க்கம், அம்மார்க்கத்தையே உபநிஷத்துக்களில் क्षुरस्यधारा निशिता दुरत्यया அதாவது தீக்ஷண்யமான கத்திவாய்போல் அதிக தீக்ஷண்யமுடையதாகி நடப்பதற்குச் சாத்தியப்படாத மார்க்க மென்பதாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அந்த தத்வம் பரப்பிரஹ்மதத்வம், ஆத்மதத்வம். மனம் வாக்கிற்கு எட்டாதது. "தத்" என்ற ஒரு சப்தத்தால் நிரூபிக்கப்

பட்டிருக்கின்றது. அந்த தத்வம் இப்படிப்பட்ட தென்ப தாக வர்ணிப்பது கூட அசாத்தியமாகி துவந்துவரூபமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

तदेजति तन्नेजति तद्दूरे तद्विदन्तके ।
तदन்तरस्य सर्वस्य तत्सर्वस्यास्य बाह्यतः ॥

"தத்" அது நடக்கும். அது சலிக்காது. தூரத்திலிருக் கும். அவ்விதமே சமீபத்திலிருக்கும். அது ஸகலபூதங்களின் உள்ளில் இருக்கும். எல்லாப் பூதங்களுக்கும் வெளியிலும் இருக்கு மென்பதாக தாத்பரியம்.

அந்தத் தத்வம் சூர்யனிடமிருக்கிறது. அக்கினியில் இருக்கிறது. அந்தரிக்ஷத்திலிருக்கிறது. ஹோதாவினிட மும் யக்ஞவேதிகையிலும் அதிதியிடமும், துரோணத்திலு ம், நரோத்தமர்களிடமும், சத்தியத்திலும், ஆகாசத்திலும், ஜலத்தில் ஜனிப்பவைகளிடத்தும், பசுக்களால் ஜனிப்பவை களிடத்தும், ஸத்தியத்தால் ஜனிப்பவைகளிடத்தும், பர்வத ங்களில் ஜனிப்பவைகளிடத்தும், ஸர்வாத்மாவாக எல்லா வற்றிலும் நிறைந்து மிருந்திருக்கும் என்பதாகச் சுருதியின் கருத்து.

ஏகமாகி, ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாகி, ஏக மாயினும், அனேகமாக வியக்தமாகக் கூடியதுமான அந்த தத்வத்தைத் தங்கள் ஆன்மாவினிடமே பார்க்கக் கூடிய தீரர்கள் எவரோ அவர்களுக்கே சாசுவத சுகமேயொழிய இத ரர்களுக் கன்று.

மேலும் அந்த தத்வமே பிரபஞ்சம் எல்லா வற்றையும் தனது அபாரமான மாயாசக்தியாலே சிருஷ்டி செய்யும் ஸகல பூதங்களுக்கும் உற்பத்தி காரணம்.

மேலும் சுருதி வாக்கியங்களாலே நிரூபிக்கப்பட்டிருக் கும் பர தத்வமானது ஸகலபூதங்களிடத்தும் நிறைந்திருக்

கிறது. ஆனதுபற்றிசர்வ பூதங்களிடத்தும் ஏகத்வ பாவத்தைக் கண்டுகொண்டு ஞானியானவன் தான் செய்யும் காரியங்களைப் பகவதர்ப்பணமாகச் செய்யத் தகும். ஸ்ரீகிருஷ்ண பகவான் தனது முக்கிய பிரிய சிஷ்யனான அர்ச்சுனனுக்குப் போதித்தவண்ணம்

यत्करोषि यदश्नासि यज्जुहोसि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥

எக்கார்யத்தைச் செய்யினும், எதைப்புசிக்கினும் எந்த ஹோமத்தைச் செய்யினும், எந்தத்தபஸைச்செய்யினும் பகவதர்ப்பணமாகச் செய்யவேண்டும். இதுவே பரமாரஹசியம். ஆகையால் சகோதரர்களே! ரிஷிகள நமது பூர்வீகர்களுக்கு அதாவது பூர்வஜன்மங்களில் நமக்கு உபதேசித்த விஷயங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து ஸ்தூலசூக்ஷ்மப் பிரபஞ்சங்களில் பூதங்களெல்லாம் ஒரு பகவானுடைய அம்சங்களென்பதாகவும், செய்யும் கர்மங்களை யெல்லாம் சிரத்தையோடு செய்து தாங்கள் பரிசுத்தர்களாகித் தாங்கள் செய்யும் கார்யங்கள் எல்லாவற்றையும் பரிசுத்தங்களாகச் செய்தும் பிரஜாபதி மனப்பூர்வமாய்ச் செய்த ஸ்வயயக்ஞத்தால் நம்மைப் போலொத்தவர்கள் உற்பத்தியாகி அபிவிர்த்தியாவதை யிட்டு அந்தரண வி[illegible] க்திக்காக நாமெல்லோரும் ஸ்வலாபத்தை விட்டொழித்து கார்யங்களாலே மீளவும் ஸர்வபூத ஐக்கியபாவத்தைக் கிரஹித்து ஞானிகளாகி ஸர்வ பூதஸமதிருஷ்டியோடு ஸர்வபூதங்களிடத்தும் அந்தப்பர தத்வத்தையே பார்த்துக்கொண்டும் ஸமஸ்தவைதிக லௌகிககார்யங்களை பகவதர்ப்பணமாகச் செய்துகொண்டும் பரமபுருஷார்த்தத்தைச் சாதிப்போமாக.

ராமசந்திர நாயுடு

இந்திய சாரணர் சங்கம்.

சிறுவர்களின் பயிற்சிமுறையும், நம்நாட்டின் முன்னேற்றமும்.

ஒவ்வொரு தேசமும் ஆங்காங்குள்ள ஜனங்களின் பயிற்சி, ஊக்கம், உற்சாகம் முதலிய வற்றாலேயே பெருமை அடைவது நாம் நன்கு அறிந்த விஷயமே. இப்பெருமை அடையத்தக்க பயிற்சி ஜனங்களுக்கு ஏற்படவேண்டுமாயின், அப்பயிற்சியில் ஜனங்கள் சின்னஞ்சிறு பிராயத்திலேயே பழக்கம் பெறவேண்டுவது அத்தியாவசியமாகும். ஐந்தில் வணங்காதது ஐம்பதில் வணங்குமா? ஆகவே நம் இந்திய நாடு நமது சிறுவர் சிறுமியராலேயே தான் முன்னேற்றம் அடையவேண்டும். நல்லது, இச்சிறுவர்களுக்கு எத்தகைய பயிற்சி வேண்டியதென்று சற்று நிதானிப்போம்.

1. திட சரீரமும், தேக சௌக்யமும்:—இராஜ்யங்கள் தழைத்தோங்க ஜனங்கள் பௌருஷமும் நோயற்றவாழ்வும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

2. மானம்(பெருமை)மனவுறுதி, செய்வன செய்தல்:- இவ்வழிகளில் பழகுதலால் அடக்கம், பொறுமை, சீலம் முதலிய நற்குணங்கள் நம்மிடத்து அமைந்து நிலைத்து நிற்க இடமுண்டு. பொறுத்தவர் பூமிஆள்வாரல்லவா? சாவித்திரி சத்யவான், ஹரிச்சந்திரன், ராமச்சந்திரன், நளன் முதலியோரது சரிதைகள் இங்குகவனிக்கத்தக்கவை.

3. பொது ஜன விஷயங்களில் விஷேச ஊக்கமும் பற்றும்:—நம் ஹிருதய கமலங்களில் உள்ளடங்கியிருக்கும் இப்பற்று நீடித்த அப்யாசத்தால் காலக்கிரமத்தில் மலர்ந்து பொலிவுறும். எந்நாட்டவரும் மேம்பாடு அடைவதற்கு இதுவோர் முக்கிய சாதனமாகும்.

(தொடரும்).

பி. ஏ. சுப்ரஹ்மண்யம்,
வாலிப சாரண சங்கத்தலைவர்,
தாக்காத்தோப்புத்தெரு.